தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### கிருஷ்ணகிரி மாவட்ட நீர்த்தேக்கம் பாசனத்துக்காக இன்று முதல் திறப்பு

**சென்னை,**



கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள கெலவரபள்ளி நீர்த்தேக்கத்திலிருந்து பாசனத்துக்காக வியாழக்கிழமை (பிப்.6) முதல் 100 நாள்களுக்கு தண்ணீர் திறக்க முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் புதன்கிழமை வெளியிட்ட அறிவிப்பு:

கெலவரபள்ளி நீர்த்தேக்கத்திலிருந்து வலது மற்றும் இடதுபுற பிரதான கால்வாய் வாயிலாக இரண்டாம் போக புன்செய் பாசனத்திற்காக தண்ணீர் திறந்துவிடுமாறு விவசாயிகளிடமிருந்து கோரிக்கைகள் வந்துள்ளன.

இவர்களது கோரிக்கையை ஏற்று அந்த நீர்த்தேக்கத்திலிருந்து வலது மற்றும் இடதுபுற பிரதான கால்வாய் வாயிலாக இரண்டாம் போக பாசனத்திற்காக 100 நாள்களுக்கு தண்ணீர் திறக்க உத்தரவிட்டுள்ளேன்.இதனால், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள 8 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என முதல்வர் ஜெயலலிதா கூறியுள்ளார்.

**சாத்தனூர் அணை இன்று திறப்பு**

**திருக்கோவிலூர்,**

சாத்தனூர் அணையில் இருந்து இன்று பாசனத்துக்காக தண்ணீரைத் திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் விவசாயம் மேற்கொள்ள திருவண்ணாமலை, விழுப்புரம் மாவட்டங்களைச் சேர்ந்த ஏரி, குளம், குட்டைகள் நிரப்பப்படும். திருவண்ணாமலை அடுத்துள்ள சாத்தனூரில் அமைந்துள்ள 119 அடி உயரம் கொண்ட இந்த அணையில் தற்போது 89 அடி தண்ணீர் உள்ளது. அணையில் இருந்து பாசனத்துக்காக தண்ணீர் திறந்து விட அரசு உத்தரவிட்டுள்ளது.

அதன்படி, இன்று காலை 10 மணிக்கு அணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படுகிறது. திருக்கோவிலூர் ஆயக்கட்டு பாசனத்துக்காக விநாடிக்கு 1220 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்படுகிறது.

**நீரினைப் பயன்படுத்துவோர் சங்க காலியிடங்களுக்கு பிப்.22-இல் தேர்தல்**

**மதுரை,**

மதுரை மாவட்டத்தில் நீரினைப் பயன்படுத்துவோர் சங்கங்களில் காலியாகவுள்ள இடங்களுக்கு பிப்ரவரி 22-ஆம் தேதி தேர்தல் நடைபெறவுள்ளது.

தமிழ்நாடு அரசு நீர்வள, நிலவளத்திட்டத்தை மாவட்டத்தில் மேல்குண்டாறு, தெற்காறு, அர்ஜுனா நதி மற்றும் மணிமுத்தாறு உபவடிநிலங்களில் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ், தமிழ்நாடு விவசாயிகள் நீர்ப்பாசன அமைப்புமுறை வேளாண்மைச் சட்டம் 2000-ன்படி, நீரினைப் பயன்படுத்துவோர் சங்கங்களின் இறப்பு மற்றும் பதவி துறப்பு காரணமாக, ஏற்பட்டுள்ள காலியிடங்களை நிரப்ப மறைமுக வாக்கெடுப்பின் மூலம் பிப்ரவரி 22-ஆம் தேதி தேர்தல் நடைபெறவுள்ளது.

தேர்தலுக்கான தேர்தல் அறிவிப்பு படிவம் வியாழக்கிழமை (பிப்.6) வெளியிடப்படும். பிப்ரவரி 13 காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை தேர்தல்

நடத்தும் அலுவலர்களாலும், உதவி தேர்தல் அலுவலர்களாலும் வேட்பு மனுக்கள் விதிகளுக்கு உட்பட்டு பெறப்படும்.வேட்புமனுக்கள் பிப்ரவரி 14-ஆம் தேதி காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை பரிசீலனை செய்யப்படும். அன்று பிற்பகல் 2 மணி முதல் மாலை 4 மணி வரை மனுக்களை திரும்பப் பெறலாம். அன்றையதினம் பிற்பகல் 4 மணிக்கு வேட்பாளர்களின் இறுதிப் பட்டியல் வெளியிடப்படும்.

பிப்ரவரி 22-ஆம் தேதி காலை 7 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை வாக்குப்பதிவு நடைபெறும். பிற்பகல் 4 மணிக்கு வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும். இது தொடர்பான முழுவிவரங்களை சம்மந்தப்பட்ட செயற்பொறியாளர் அலுவலகங்களை அணுகிப் பெற்றுக் கொள்ளலாம், என மாவட்ட ஆட்சியர் இல.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

**ராஜபாளையம் பகுதியில் தேங்காய் விளைச்சல் சரிவு**

**ராஜபாளையம்,**

தேங்காய்க்கு நல்ல விலை இருந்தும் வறட்சியால் போதிய விளைச்சல் இல்லாமல் ராஜபாளையம் பகுதி தென்னை விவசாயிகள் கவலையில் உள்ளனர்.

ராஜபாளையம் அய்யனார் கோவில் செல்லும் வழியில், செண்பகத்தோப்பு சாலைப் பகுதிகளில் தென்னந்தோப்புகள் அதிகளவில் உள்ளன. இதுபோல் முகவூர், சேத்தூர், தேவதானம் பகுதிகளிலும் அதிக பரப்பளவில் தென்னந்தோப்புகள் உள்ளன. இந்த ஆண்டு போதிய மழை இல்லாமல் பெரும்பாலான தோப்புகளில் தேங்காய் விளைச்சல் வெகுவாக குறைந்துள்ளது.

தற்போது ராஜபாளையம் தேங்காய் சந்தையில் 1150 தேங்காய்களுக்கு ரூ. 5500 முதல் ரூ. 5700 வரை விலை நிலவுகிறது. தேங்காய்க்கு நல்லவிலை இருந்தும் விளைச்சல் இல்லாதநிலை இருப்பதால் தென்னை சாகுபடி விவசாயிகள் நஷ்டம் அடைந்து வருகின்றனர். இந்த ஆண்டு தேங்காய்க்கு நல்ல விலை கிடைத்து வருகிறது.

நாகர்கோவில் கோட்டார் பகுதியில் விளையும் தேங்காய் ஒன்று ரூ. 15 முதல் ரூ. 23 வரை விலை நிலவுகிறது. ராஜபாளையம் பகுதியில் வளையும் தேங்காய் ஒன்று ரூ. 9 முதல் ரூ.13 வரை விலை நிலவுகிறது.

இதுபோல் தென்காசி, கொல்லம், பாபநாசம் பகுதிகளில் விளையும் தேங்காய் விலையும் காய் ஒன்று ரூ. 14 முதல் ரூ. 18 வரை விலை நிலவுகிறது. தேங்காய் விளைச்சல் இந்த ஆண்டு குறைவாலும், தேவை அதிகரிப்பாலும் விலை அதிகரித்துள்ளது.

மாசி மஹா சிவராத்திரி வரை கோவில் விழாக்கள் இந்தியாவில் பல்வேறு பகுதிகளில் இருக்கும் என்பதால் அதுவரை தேங்காய் தேவை அதிகமிருக்கும் விலையும் அதிகமாக இருக்கும் என தேங்காய் வியாபாரிகள் தெரிவித்தனர்.

**அமராவதி ஆற்றில் தண்ணீர் திருடிய இணைப்புகள் துண்டிப்பு**

**தாராபுரம்,**

தாராபுரம் அருகே அமராவதி ஆற்றில் தண்ணீர் திருடியதாக, 7 இணைப்புகளை வருவாய்த் துறையினர் துண்டித்துள்ளனர்.

தாராபுரம் வட்டாரத்தில் மூலனூர், கன்னிவாடி பகுதிகளில் குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்க வருவாய்த் துறை, பொதுப்பணித் துறை மற்றும் உள்ளாட்சித் துறை அதிகாரிகள் தீவிர நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

வேலாம்பூண்டி ஊராட்சிக்கு உள்பட்ட அணைப்பாளையம் பகுதியில் அமராவதி குடிநீர்த் திட்ட சுத்திகரிப்புத் தொட்டி உள்ளது. இதனருகே விவசாயிகள் சட்டவிரோதமாக மோட்டார் வைத்து தண்ணீர் திருடுவதாக வருவாய்த் துறையினருக்கு தகவல் வந்தது.

கோட்டாட்சியர் ஆர்.திவாகர் தலைமையில், வட்டாட்சியர் த.சிவசுப்பிரமணியம் மற்றும் அலுவலர்கள் அப்பகுதியில் புதன்கிழமை சோதனை மேற்கொண்டனர். அப்போது தண்ணீர் திருடுவது கண்டுபிடிக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட குழாய்கள் துண்டிக்கப்பட்டன. மேலும் தண்ணீர் திருடியவர்களின் மின்இணைப்புகளை

நிரந்தரமாகத் துண்டிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வருவாய்த் துறையினர் தெரிவித்துள்ளனர்.

### **பவானிசாகர் அணை நீர்மட்டம் 41.40 அடி**

**ஈரோடு,**

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் புதன்கிழமை 41.40 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 450 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 700 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 2.69 டி.எம்.சி.

### **போளூர் சிறையில் விளைவிக்கப்பட்ட சுரைக்காய்**

**போளூர்,**

போளூரில் உள்ள கிளைச் சிறைச்சாலையில் விளைவிக்கப்பட்ட சுரைக்காய் சென்னை எழும்பூரில் உள்ள சிறைத்துறை அங்காடிக்கு புதன்கிழமை அனுப்பி வைக்கப்பட்டது.

போளூரில் தாலுகா அலுவலகம் அருகே கிளைச் சிறை உள்ளது. இந்தக் கிளைச் சிறையில் காலியாக உள்ள இடத்தில் காய்கறி தோட்டம் அமைத்துள்ளனர். இந்தத் தோட்டத்தில் கத்தரி, முள்ளங்கி, தக்காளி, கீரை, சுரக்காய் ஆகியவற்றை பயிர் செய்துள்ளனர். சிறையில் பயன்படுத்தி வீணாகும் தண்ணீரை தோட்டத்துக்கு பாய்ச்சுகின்றனர். இதில் சாகுபடி செய்யப்பட்டு சிறைக்குத் தேவையான காய்கறிகளை எடுத்துக் கொள்கின்றனர். இந்தத் தோட்டத்தில் சுரக்காய் கொடியில் 11 காய்கள் காய்த்துள்ளன. இதன் எடை 29 கிலோவாக இருந்தது. அவற்றை சென்னை எழும்பூரில் உள்ள சிறைத் துறை அலுவலகத்தில் உள்ள அங்காடிக்கு அனுப்பி வைத்தனர்.

கூடுதல் காவல்துறை இயக்குநர் மற்றும் சிறைத்துறை தலைவர் திரிபாதி, வேலூர் மத்திய சிறை கண்காணிப்பாளர் கருப்பண்ணன் ஆகியோரின் அறிவுறுத்தலின்

பேரில் இந்தப் பணி மேற்கொள்ளப்பட்டதாக போளூர் கிளைச்சிறை கண்காணிப்பாளர் ச.நாராயணன் கூறினார்.

மேலும் இந்த மாதிரி தோட்டம் அமைப்பதன் மூலம் கைதிகள் மனச்சோர்வு, மனஅழுத்தத்துக்கு ஆள்படாமல் இருக்க வாய்ப்பேற்படுவதாகவும் கூறினார்.

**ஓதலவாடி ஆற்றில் தடுப்பணை கட்ட வேண்டும்: குறைதீர் கூட்டத்தில் விவசாயிகள் கோரிக்கை**

**போளூர்,**

போளூர் தாலுகா அலுவலகத்தில் விவசாய குறைதீர்வு கூட்டம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இதில் ஓதலவாடி ஆற்றில் தடுப்பணை அமைக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை வைத்தனர்.

போளூர் தாலுகா அலுவலகத்தில் விவசாய குறைதீர் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்துக்கு மாவட்ட விநியோக அலுவலர் கிருபானந்தம் தலைமை வகித்தார். வட்டாட்சியர் கிருஷ்ணமூர்த்தி, வட்ட வழங்கல் அலுவலர் கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர். மண்டலத் துணை வட்டாட்சியர் தியாகராஜன் வரவேற்றார்.

கூட்டத்தில் விவசாயிகள் கூறியதாவது: அல்லியாளமங்கலம் காப்புக் காட்டை ஒட்டியுள்ள ஆத்துரை, பெரணம்பாக்கம், சித்தாத்துரை ஆகிய விவசாய பகுதிகளின நிலங்களில் பயிரிடப்படும் மணிலா, கரும்பு, கம்பு ஆகிய பயிர்களை காட்டுப் பன்றிகள் புகுந்து சேதப்படுத்துகின்றன. இதை வனத்துறை அலுவலர்கள் கட்டுப்படுத்த மின்வேலி அமைக்க வேண்டும்.

மேலும் வருவாய்த்துறை சார்பில் சேதம் அடைந்த பயிர்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என்றும், பெரியகரம் ஊராட்சியில் உள்ள அரசு பள்ளிக்கு இரவுக் காவலரை நியமிக்க வேண்டும். மேலும் ஊராட்சியில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றவேண்டும், போளூரில் குடிநீர் பிரச்னை ஏற்பட்டுள்ளது. இதனைத் தீர்க்க பேரூராட்சி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர்.

மேலும் பேரூராட்சியில் நாய், கொசுத் தொல்லை அதிகமாக உள்ளது, இதனைத் தடுக்க வேண்டும், போளூரில் உள்ள அரசு மருத்துவமனையில் போதிய மருத்துவர்கள் இல்லை, மகப்பேறு மருத்துவம் செய்ய உடனடியாக மருத்துவரை நியமிக்க வேண்டும், தரணி சர்க்கரை ஆலைக்கு விவசாயிகள் கரும்பு வெட்டி ஏற்றி அனுப்பி 54 நாள்களாக பணம் பட்டுவாடா நடைபெறாமல் உள்ளது. இதனை அரசு தலையிட்டு கரும்புக்கான பணத்தைப் பெற்றுத் தர நடவடிக்கை எடுக்க வேண்டும், சேத்துப்பட்டு ஒன்றியம் ஓதலவாடி ஆற்றில் தடுப்பணை அமைக்க வேண்டும், ஆற்றுக் கால்வாயை தூர்வார நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் கூறினர்.

ஒன்றியக் கவுன்சிலர் அன்புதாஸ், வேளாண்மை உதவி இயக்குநர்கள் கண்ணகி, வடமலை மற்றும் விவசாய பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

## மானிய விலையில் வைக்கோல் வழங்கும் திட்டம் விரைவில் தொடக்கம் திருவண்ணாமலை,

திருவண்ணாமலை மாவட்ட விவசாயிகளுக்கு மானிய விலையில் வைக்கோல் வழங்கும் திட்டத்தை விரைவில் தொடங்க மாவட்ட நிர்வாகம் திட்டமிட்டுள்ளது.

இத்திட்டத்தின்படி மாவட்டத்தில் கால்நடைகள் வைத்துள்ள சிறு, குறு விவசாயிகளுக்கு மட்டும் மானிய விலையில் உலர் தீவனம் (வைக்கோல்) வழங்கப்படும்.

இத்திட்டத்தை செயல்படுத்த முதல்கட்டமாக மாவட்டத்தின் 4 இடங்களில் உலர் தீவன கிடங்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

திருவண்ணாமலை கால்நடை பெருமருத்துவமனை, போளூர் கால்நடை மருத்துவமனை, கொருக்கை மற்றும் தண்டரை பகுதிகளில் உள்ள கால்நடை மருந்தகங்களில் இந்த தீவன கிடங்குகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த கிடங்குகளில் இருந்து விவசாயிகளுக்குத் தேவையான அளவு வைக்கோல் மானிய விலையில் வழங்கப்படும்.

ஒரு கால்நடைக்கு நாள் ஒன்றுக்கு 3 கிலோ வீதம் 7 நாள்களுக்கும், ஒரு பயனாளிக்கு அதிகபட்சமாக 5 கால்நடைகளுக்கும் உலர் தீவனங்கள் வழங்கப்படும். மானிய விலையில் வழங்கப்படும் வைக்கோல் கிலோ ரூ.2 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. முறைகேடுகளைத் தடுக்க கால்நடைத்துறை மூலம் பிரத்யேகமாக விவசாயிகளுக்கு தீவன அட்டைகள் வழங்கப்பட்டு, அதன் மூலம் வைக்கோல் விநியோகம் நடைபெறும்.

இதன் மூலம் வறட்சி காலங்களில் கால்நடைகள் தீவனம் இல்லாமல் தவிப்பது தடுக்கப்படும் என்று மாவட்ட ஆட்சியர் அ.ஞானசேகரன் தெரிவித்துள்ளார்.

## உழவர் விவாதக் குழு அமைப்பாளர் பயிற்சிக் கூட்டம்

**போளூர்,**

போளூரில் மாவட்ட உழவர் பயிற்சி நிலையம் சார்பில் உழவர் விவாதக் குழு அமைப்பாளர் பயிற்சிக் கூட்டம் புதன்கிழமை நடைபெற்றது.

கூட்டத்துக்கு மாவட்ட உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை அலுவலர் எலிசபெத்மேரி தலைமை வகித்து விவசாய பிரதிநிதிகளுக்கு புதிய தொழில்நுட்பம் மூலம் செய்யப்படும் திருந்திய நெல் சாகுபடி, மணிலா உற்பத்தி மற்றும் சொட்டுநீர்ப் பாசனத்தில் குறைந்த நீரை பயன்படுத்தி மக்காச் சோளத்தில் அதிக மகசூல் பெறுவது பற்றியும், வறட்சி நேரத்தில் விவசாயத்துக்கு நீர் பயன்படுத்தும் முறைகள் குறித்தும், மஞ்சள், வாழை, வீட்டு தோட்டம் அமைப்பது குறித்தும், உயிர் உரம் பயன்பாடு, இயற்கை விவசாயம் குறித்தும், மண் பரிசோதனையின் முக்கியத்துவம் குறித்தும், மண்வளத்தைப் பாதுகாத்தல் குறித்தும் பேசினர்.

போளூர் வேளாண்மை உதவி இயக்குநர் கண்ணகி, தோட்டக் கலைத்துறை வேளாண்மை உதவி அலுவலர்கள் சுதாகர், அய்யப்பன் (வேளாண்மை வணிகம்), வேளாண்மை அலுவலர் குணசேகரன் (இயற்கை விவசாய உரம்) மற்றும் உழவர் விவாதக்குழு அமைப்பாளர்கள், பயிற்சியாளர்கள் கலந்துகொண்டனர்.

**விவசாயிகளுக்கு பண்ணைப் பயிற்சி**

**தருமபுரி,**

தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி அருகே விவசாயிகளுக்கு பண்ணைப் பயிற்சி முகாம் அண்மையில் நடைபெற்றது.

அட்மா திட்டம் சார்பில் அதிகாரிப்பட்டில் நடைபெற்ற இந்தப் பயிற்சி முகாமுக்கு பாப்பிரெட்டிப்பட்டி வட்டார வேளாண் உதவி இயக்குநர் வி.மனோகரன் தலைமை வகித்தார். பாப்பாரப்பட்டி வேளாண் அறிவியல் மைய முனைவர் ஆண்டர்சன், மக்காச்சோளத்தில் அறுவடை, அதைச் சார்ந்த தொழில்நுட்பங்கள் குறித்து பயிற்சி அளித்தார்.

மேலும், மண் மாதிரி எடுத்தல், நிலத்தைப் பண்படுத்தல், ஒருங்கிணைந்த உர மேலாண்மை, களைக் கட்டுப்பாடு, நோய் மேலாண்மை ஆகியவை குறித்து செயல்விளக்கமாக விளக்கினார். 6 பிரிவுகளாக நடைபெற்ற இந்தப் பயிற்சியில் 25-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

இதில் விவசாயிகளுக்கு மக்காச்சோளம் சாகுபடி தொழில்நுட்ப விவரங்கள் அடங்கிய கையேடுகள் இலவசமாக வழங்கப்பட்டன.

முகாமில், வட்டாரத் தொழில்நுட்ப மேலாளர் பி.ரவி, தொழில்நுட்ப மேலாளர்கள் பி.சண்முகம், வி.வசந்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.

**நாளை மக்காச்சோளம் சாகுபடிக் கருத்தரங்கு**

**தருமபுரி,**

தருமபுரி மாவட்ட ஆட்சியரக வளாகத்தில் வெள்ளிக்கிழமை (பிப்.7) நடைபெற உள்ள மக்காச்சோளம் சாகுபடிக் கருத்தரங்கு, கருத்துக்காட்சியில் விவசாயிகள் பங்கேற்றுப் பயனடையலாம்.

இதுகுறித்து வேளாண் இணை இயக்குநர் கே.மோகன் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

அட்மா திட்டத்தின் கீழ் மாவட்ட அளவில் நடைபெறும் மக்காச்சோளம் சாகுபடிக் கருத்தரங்கு, கருத்துக்காட்சிக்கு மாநில உயர் கல்வித் துறை அமைச்சர் பி.பழனியப்பன் தலைமை வகிக்கிறார். ஆட்சியர் கே.விவேகானந்தன் முன்னிலை வகிக்கிறார்.

மக்காச்சோளம் சாகுபடி தொழில் நுட்பங்கள், அறுவடைக்கு பின் சார் தொழில்நுட்பம், உணவு தானிய உற்பத்தியில் மக்காச்சோளம் சாகுபடியின் பங்கு குறித்து வேளாண் பல்கலைக்கழக விஞ்ஞானிகள், விதை ஆய்வு, விதைச் சான்று, வேளாண் விற்பனை, வணிகத் துறையைச்  சேர்ந்த தொழில்நுட்ப வல்லுநர்கள் விரிவாக விளக்கம் அளிக்கின்றனர்.

பாசன நீர் பற்றாக்குறை உள்ள இந்தத் தருணத்தில் குறைந்த அளவு நீரைக் கொண்டு நிறைவான மகசூல் பெறவும், குறைந்த முதலீட்டில் அதிக லாபம் பெற மக்காச்சோளம் சாகுபடி செய்து வருமானத்தை பெருக்குவதுடன், உணவுப் பாதுகாப்பை விவசாயிகள் உறுதி செய்யலாம். கருத்தரங்கில் தனியார் விதை நிறுவனங்கள், நுண்ணீர் பாசன நிறுவனங்கள், இதர இடுபொருள் விநியோகம் செய்யும் நிறுவனங்கள் கலந்து கொண்டு கருத்துக்காட்சி அமைக்கின்றன.

ஆர்வமுள்ள விவசாயிகள் கருத்தரங்கில் கலந்து கொண்டு கற்றுத் தரும் உயர் தொழில்நுட்பங்களைக் கடைப்பிடித்து மக்காச்சோளம் சாகுபடி செய்து அதிக லாபம் பெறுவதுடன், நாட்டின் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்ய உறுதுணையாக இருக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வீடுகள், கறவைப் பசுக்கள் பெற பழங்குடியினர் விண்ணப்பிக்கலாம்

**தருமபுரி,**

வீடுகள், கறவைப் பசுக்களைப் பெற தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த பழங்குடியினர் விண்ணப்பிக்கலாம் என மாவட்ட ஆட்சியர் கே.விவேகானந்தன் தெரிவித்தார்.

இதுகுறித்து புதன்கிழமை அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

மத்திய அரசு நிதி திட்டத்தின் கீழ், இருளர்கள், காட்டுநாயக்கர்கள் 30 பேருக்கும் தலா ரூ.75 ஆயிரம் மதிப்பில் வீடுகள், 100 பயனாளிகளுக்கு தலா ரூ.34 ஆயிரத்து 400 மதிப்பில் கறவைப் பசுக்கள், வழங்கப்பட உள்ளன.

எனவே, தகுதி வாய்ந்த தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த இருளர்கள், காட்டுநாயக்கர்கள் வருகிற 14-ஆம் தேதிக்குள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள ஆதிதிராவிடர், பழங்குடியினர் நல அலுவலகத்தில் வீடுகள், கறவைப் பசுக்கள் கோரி விண்ணப்பிக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பரமத்தி வேலூர் ஏலச் சந்தையில் வாழைத்தார் விலை சரிவு

**பரமத்தி வேலூர்,**

பரமத்தி வேலூர் ஏலச் சந்தையில் வாழைத்தார் விலை திடீரென சரிவடைந்துள்ளதால், வாழைத்தார் பயிர் செய்துள்ள விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

பரமத்தி வேலூர் வட்டம், காவிரிக் கரையோரப் பகுதிகளான பாண்டமங்கலம், பொத்தனூர், வேலூர், நன்செய் இடையாறு, அனிச்சம்பாளையம், ஓலப்பாளையம், பாலப்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் ஏராளமான ஏக்கரில் வாழை பயிரிடப்பட்டுள்ளது.

இந்தப் பகுதிகளில் விளையும் வாழைத்தார்கள் பரமத்தி வேலூரில் நடைபெறும் வாழைத்தார் ஏலச் சந்தைக்கு கொண்டு வரப்பட்டு, அங்கு ஏலம் விடப்படுகின்றன. ஏலம் எடுப்பதற்கு பல்வேறு மாவட்டங்களில் வியாபாரிகள் வருகின்றனர்.

கடந்த வாரம் நடைபெற்ற ஏலத்தில் பூவன் வாழைத்தார் ரூ.550-க்கும், ரஸ்தாலி வாழைத்தார் ரூ.350-க்கும், பச்சை லாடன் வாழைத்தார் ரூ.300-க்கும், கற்பூர வள்ளி வாழைத்தார் ரூ.300-க்கும் ஏலம் போனது. மொந்தன் வாழைக்காய் ஒன்று ரூ.8-க்கு விற்பனையானது.

புதன்கிழமை நடைபெற்ற ஏலத்தில் பூவன் வாழைத்தார் ரூ.250-க்கும், ரஸ்தாலி வாழைத்தார் ரூ.200-க்கும், பச்சை லாடன் வாழைத்தார் ரூ.150-க்கும், கற்பூர வள்ளி வாழைத்தார் ரூ.200-க்கும் ஏலம் போனது. மொந்தன் வாழைக்காய் ஒன்று ரூ.5-க்கு

விற்பனையானது.தற்போது விசேஷ நிகழ்ச்சிகள் இல்லாததால் வாழைத்தார் விலை திடீரென சரிவடைந்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

**ஏற்காடு காபி விவசாயிகளுக்கு விருது**

**ஏற்காடு,**

சேலம் மாவட்டம், ஏற்காடு காபி விவசாயிகளுக்கு சிறந்த, தரமான காபி உற்பத்திக்கான விருது கிடைத்துள்ளது.கர்நாடக மாநிலம், பெங்களூருவில் ஜனவரி 24 ஆம் தேதி நடைபெற்ற விழாவில், ஏற்காடு காபி விவசாயிகள் விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். இந்த விழாவில், சேலம் மாவட்டம், சேர்வராயன் மலை, கல்லேரி எஸ்டேடுக்கு ரோபஸ்ர காபி வகைக்கு 2012ஆம் ஆண்டுக்கான விருதும், ஏற்காடு காபி வாரியத் தொழில் மதிப்பீட்டு மையத்துக்கு அரபிக்கா வகை காபிக்கு 2012 -ஆம் ஆண்டுக்கான விருதும் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

மேலும், 2013ஆம் ஆண்டு அரபிக்கா காபி விருது செம்மநத்தம் கிராமம் மோகநாடு எஸ்டேட், கவுரி எஸ்டேட், நாகலூர் கிராமம் மூன் எஸ்டேட் நிர்வாகத்தினருக்கு வழங்கப்பட்டுள்ளதாக காபி வாரிய முதுநிலைத் தொடர்பு அலுவலர் தெரிவித்தார்.

மேலும், இந்த ஆண்டு விருதுக்கான விண்ணப்பங்கள் ஏற்காடு காபி வாரியத்தில் வரவேற்கப்படுவதாகவும், காபி விவசாயிகள் விண்ணப்பத்தைப் பெற்று விருதுக்கான போட்டியில் பங்கு பெறுமாறும் முதுநிலைத் தொடர்பு அலுவலர் பி.ராமக் கவுண்டர் கேட்டுக்கெண்டார்.

மேலும், விவரங்களுக்கு அலுவலக எண்ணில் 04281 222437 -தொடர்பு கொள்ளலாம் எனவும், விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய கடைசிநாள் மார்ச் 4 ஆம் தேதி என்றும் அவர் தெரிவித்தார்.

## 396 பயனாளிகளுக்கு ரூ. 7.70 கோடி கடனுதவி

**பெரம்பலூர்,**

பெரம்பலூரில் விவசாயம் மற்றும் முன்னுரிமைக் கடன்கள் வழங்கும் முகாம் புதன்கிழமை நடைபெற்றது.

இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் தஞ்சை மண்டலத்தின் சார்பில் வங்கி நிறுவனர் நாளையொட்டி நடைபெற்ற இம்முகாமுக்கு தஞ்சை மண்டல முதன்மை மேலாளர் எஸ். ராஜேந்திரன் தலைமை வகித்துப் பேசியது:

பெரம்பலூர் மாவட்டத்தை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்ல, இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் அனைத்துக்கிளை மேலாளர்களும் விவசாயிகள், கல்வியாளர்கள், பொதுநிலையினர் என அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் முன்னுரிமைக் கடன் வழங்க வேண்டும் என்றார்.

பயனாளிகளுக்கு முன்னுரிமைக்கான கடனுதவிக்கான காசோலைகள் வழங்கி இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் பொது மேலாளர் ஆர்.கே. குப்தா பேசியது:

சிதம்பரம் என்பவர், இந்தியன் ஓவர்சீஸ் வங்கியை கடந்த 78 ஆண்டுகளுக்கு முன், 3 வெளிநாட்டுக் கிளைகளுடன் தொடங்கினார்.

தற்போது, பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள 17 கிளைகள் உள்பட, தஞ்சை மண்டலத்தில் 74 கிளைகளுடன் செயல்பட்டு வருகிறது. பெரம்பலூர் மாவட்டத்தில் விவசாயம் மற்றும் முன்னுரிமைக் கடன் அதிகம் வழங்குவதில், இந்தியன் ஓவர்சீஸ் வங்கி பெருமை கொள்கிறது.

இதை, ஒரு பணியாக செய்யாமல் சமூக அக்கறையோடு செய்து வருகிறது. மகளிருக்கு தன்னம்பிக்கை ஏற்படுத்தும் வகையில், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு அதிகப்படியான கடன் தொகை வழங்கப்பட்டுள்ளது.

பயனாளிகள் வாங்கும் வங்கிக் கடன் தொகையை முறையாக பயன்படுத்தி, வங்கிக்குத் திருப்பிச் செலுத்தினால் வாழ்வில் முன்னேற்றம் அடைவார்கள். அவர்களது சேமிப்புத் தொகையும் அதிகரிப்பதோடு, மற்றவர்களும் பயன்பெறுவார்கள் என்றார் அவர்.

தொடர்ந்து, 251 விவசாயிகளுக்கு ரூ. 4.47 கோடி மதிப்பிலும், 84 சிறு, குறு தொழில் முனைவோர்களுக்கு ரூ. 1.93 கோடி மதிப்பிலும், இதர வணிக கடன்களாக 31 நபர்களுக்கு ரூ. 1.30 கோடி மதிப்பிலும் என, 396 பயனாளிகளுக்கு ரூ. 7.70 கோடி மதிப்பில் கடன் தொகைகள் வழங்கப்பட்டன.

விழாவில், முதன்மை மேலாளர் சி. சந்திரசேகர், உதவி பொதுச் செயலர்கள் மோகனசுந்தரம், சத்தியசீலன், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் சந்திரசேகரன், ஐ.ஓ.பி கிராமிய சுய வேலைவாய்ப்புப் பயிற்சி மைய இயக்குநர் ஜி. பார்த்தசாரதி உள்பட பலர் பங்கேற்றனர்.

தஞ்சை முதன்மை மேலாளர் ராஜா ருக்மாங்கதன் வரவேற்றார். பெரம்பலூர் கிளை முதன்மை மேலாளர் ஆதிமூலம் நன்றி கூறினார்.

**நெல் கொள்முதல் நிலையங்கள் தொடக்கம்**

**பெரம்பலூர்,**

பெரம்பலூர் மாவட்டம், குன்னம் மற்றும் வேப்பந்தட்டை வட்டங்களில் வியாழக்கிழமை (பிப். 6) முதல் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் செயல்பட உள்ளன.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் தரேஸ் அஹமது புதன்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

2013-14-ம் ஆண்டு பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் தமிழக அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தின் சார்பில் பெரம்பலூர் மாவட்டம், குன்னம் வட்டத்திற்குள்பட்ட ஒகளூர், நன்னை ஆகிய கிராமங்களிலும், வேப்பந்தட்டை வட்டத்திற்குட்பட்ட இனாம் அகரம் கிராமத்திலும் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளது.

நெல் கிரேடு "ஏ' குவிண்டால் ஒன்றுக்கு, கொள்முதல் விலையாக ரூ. 1,345, ஊக்கத் தொகையாக ரூ. 70 என, மொத்தம் ரூ. 1,415, பொதுரக நெல் குவிண்டால் ஒன்றுக்கு கொள்முதல் விலையாக ரூ. 1,310, ஊக்கத்தொகையாக ரூ. 80 என

மொத்தம் ரூ. 1,360 குறைந்தபட்ச ஆதார கொள்முதல் விலையாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

எனவே, பெரம்பலூர் மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் அறுவைடையான நெல்லை விற்பனை செய்து விவசாயிகள் பயனடையலாம் என்று செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### குமரி அரசு பழப்பண்ணையில் ரூ. 1.80 லட்சத்துக்கு மாம்பழம் ஏலம்

### கன்னியாகுமரி,

கன்னியாகுமரி அரசு பழப்பண்ணையில் ரூ. 1 லட்சத்து 88 ஆயிரத்து 888-க்கு மாம்பழம் ஏலம் விடப்பட்டது.

கன்னியாகுமரியில் இருந்து நாகர்கோவில் செல்லும் முக்கிய சாலையில் 31.64 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது அரசு பழப்பண்ணை. இங்கு மா, சப்போட்டா, கொய்யா உள்ளிட்ட பழவகைள் விளைவிக்கப்படுகின்றன. மேலும் ரோஜா, முல்லை, மல்லிகை உள்ளிட்ட பூ வகைகளும் பயிரிடப்பட்டுள்ளன.

இங்குள்ள 400-க்கும் மேற்பட்ட மாமரங்களில் ஜனவரி தொடங்கி மார்ச் வரையிலான இடைநிலை பருவ சீசனில் பங்கனபள்ளி, ஹீமாயுதீன், பெங்களூரா, நீலம், களப்பாடு உள்ளிட்ட ரகங்களில் மாங்காய் அதிகமாக காய்த்துள்ளது. இதற்கான ஏலம் தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் சிவகுமார், உதவி இயக்குநர் அசோக் மேக்கரின், குமரி பழப்பண்ணை மேலாளர் குமரேசன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

அகஸ்தீசுவரத்தைச் சேர்ந்த ஸ்ரீனிவாசன் என்பவர் ரூ. 1 லட்சத்து 88 ஆயிரத்து 888-க்கு ஏலம் எடுத்தார்.

### வேளாண்மையுடன் இணைந்த கால்நடை வளர்ப்பை ஊக்குவிக்க வேண்டும்

### திருநெல்வேலி,

வேளாண்மையுடன் இணைந்த கால்நடை வளர்ப்பை ஊக்குவிக்க வேண்டும் என திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் மு.கருணாகரன் வலியுறுத்தினார்.

திருநெல்வேலி மாவட்டம், மானூர் ஊராட்சி ஒன்றியத்துக்குள்பட்ட மதவக்குறிச்சி ஊராட்சியின் வெங்கலப் பொட்டல் கிராமத்தில் நடைபெற்ற கால்நடை மருத்துவ முகாமுக்கு தலைமை வகித்து அவர் பேசியது: கால்நடை வளர்ப்பை ஊக்குவிக்க வேண்டும் என்பதற்காகவே தமிழக அரசு இலவசமாக ஆடு, மாடுகளை வழங்கி வருகிறது.

விவசாயிகளுக்கு வேளாண்மையுடன் இணைந்த கால்நடை வளர்ப்பால் கூடுதல் வருவாய் கிடைப்பதுடன், வெண்மை புரட்சியாக பால் உற்பத்தியை அதிகரிக்கவும் முடியும். எனவே விவசாயிகள் வேளாண்மையுடன் கறவை மாடுகள் வளர்த்தல், ஆடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு ஆகியவற்றிலும் கவனம் செலுத்த வேண்டும் என்றார் அவர்.

திருநெல்வேலி கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் செ. பிரதாபன் பேசியதாவது: தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் மூலம் அனைத்து உறுப்பு கல்லூரிகள், விரிவாக்க மையங்களில் கால்நடை வார விழா கொண்டாட அறிவுறுத்தப்படுள்ளது.

இதன்படி, திருநெல்வேலி அரசு கால்நடை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் சார்பில் திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் கால்நடை வார விழா கொண்டாடப்படுகிறது. இதன்படி, இப்போது மருத்துவ முகாம் நடைபெறுகிறது. இதேபோல் அனைத்துப் பகுதிகளிலும் முகாம்கள் நடைபெறும். இதனை விவசாயிகள் நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார் அவர்.

மாநிலங்களவை உறுப்பினர் எஸ். முத்துக்கருப்பன், எம்எல்ஏ நயினார் நாகேந்திரன், ஊராட்சி மன்றத் தலைவர் இ. வேலாயுதம் உள்ளிட்டோர் பேசினர். வெங்கலப்பொட்டல் கிராமத்தில் கால்நடை கிளை நிலையம் அமைக்க இடம் ஒதுக்கித் தருவதாக ஒன்றியத் தலைவர் உறுதியளித்தார்.

முகாமில், 159 ஆடுகளுக்கு நீல நாக்கு நோய்த் தடுப்பூசி அளிக்கப்பட்டது. 447 நாட்டுக் கோழிகளுக்கு வெள்ளைக் கழிச்சல் நோய்த்தடுப்பு மருந்து, 45

நாய்களுக்கு வெறிநோய் தடுப்பூசி, 66 கறவை மாடுகள், 180 செம்மறியாடுகள், 45 நாய்களுக்கு குடற்புழு நீக்கம் செய்யப்பட்டது. 12 மாடுகளுக்கு மலடு நீக்க சிகிச்சையும், 5 மாடுகளுக்கு சினை ஊசியும் அளிக்கப்பட்டது. 33 கால்நடைகளுக்கு பொது மருத்துவ சிகிச்சையும் அளிக்கப்பட்டது.

முகாமில், நவீன வெள்ளாடு வளர்ப்பு குறித்த புத்தகம் வெளியிடப்பட்டது. கால்நடை சிறப்பு கண்காட்சியும் நடைபெற்றது. மேலும், 932 பேருக்கு விலையில்லா மிக்ஸி, கிரைண்டர், மின்விசிறி ஆகியவை வழங்கப்பட்டன.

கால்நடை பராமரிப்புத் துறை இணை இயக்குநர் கெங்கராஜ், பிராணிகள் வதை தடுப்புச் சங்க துணைத் தலைவர் பிரான்சிஸ் ராய், சுஸ்லான் பவுண்டேசன் மாநில பொறுப்பாளர் ரவிகுலராமன் மற்றும் அரசு அலுவலர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், கால்நடை மருத்துவக் கல்லூரி பேராசிரியர்கள், மருத்துவர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் தீவிர நெல் சாகுபடி**

கம்பம், குமுளி, தேனி, பாளையம், வீரபாண்டி மற்றும் சுற்றியுள்ள கிராமங்களில் உள்ள விவசாயிகள் ஜேசிஎல், என்எல்ஆர் 34449, ஜே13, எஎஸ்டி 16 மற்றும் கர்நாடகா பொன்னி நெல் ரகங்களை முதல் போகத்தில் சாகுபடி செய்து அறுவடை செய்து முடித்து உள்ளார்கள். விவசாயிகள் ஒரு ஏக்கரில் 60 கிலோ மூட்டை 45 மூட்டை மகசூல் எடுத்து உள்ளார்கள். ஒரு மூட்டை நெல்லின் விதை ரூ.800. ஒரு ஏக்கரில் வைக்கோலின் மதிப்பு ரூ.2,000.

விவசாயிகள் இரண்டாம் போகம் நெல் சாகுபடி செய்து நல்ல விளைச்சலில்

உள்ளது. நல்ல மகசூல் வரும் என்று விவசாயிகள் எதிர்ப்பார்க்கிறார்கள். இரண்டாம் போகம் நெல் அறுவடை செய்து நல்ல மகசூல் எடுத்த பிறகு விவசாயிகள் ஜே 13, 100 நாள் நெல் ரகத்தை தேர்ந்தெடுத்து சாகுபடியை துவக்கலாம் என்று இக்கட்டுரையின் ஆசிரியர் விவசாயிகளுக்கு ஆலோசனை தெரிவிக்கிறார். ஜே 13 நெல்லிற்கு குச்சி நெல் என்ற பெயரும் உண்டு. விவசாயிகள் ஜே 13 நெல்லினை நேரடியாக விதைத்து சாகுபடி செய்தால் நெல் ரகத்தின் வயது குறையும். உடனே நடவு நிலத்திற்கு நன்கு மக்கிய தொழு உரம் ஏக்கருக்கு நான்கு ட்ரெய்லர் லோடு இட்டு நிலத்தை உழ வேண்டும். கடைசி உழவின் போது அடி உரமாக ஏக்கருக்கு அம்மோனியம் பாஸ்பேட் இரண்டு மூட்டைகள், பொட்டாஷ் 35 கிலோ இட்டு நிலத்தை சமன் செய்ய வேண்டும். பின்னால் பிறகு நடவிற்கு முன் 10 கிலோ பொடி செய்யப்பட்ட ஆற்று மணலுடன் கலந்து வயலுக்கு இட்டு நாற்றுக்களை நட வேண்டும். நாற்றுக்களை வரிசை நடவு போட வேண்டும். வயலில் களை எடுக்கும் கருவியை பயன்படுத்த வேண்டும். களை எடுக்கும் கருவியை பயன்படுத்தினால் வேர் வளர்ச்சி நன்றாக இருக்கும். ஜே13 நெல் பயிரிட்ட வயலுக்கு முறைப்படி பாசனம் செய்ய வேண்டும். நெல் அறுவடைக்கு எட்டு நாட்கள் முன்பாக பாசனத்தை நிறுத்த வேண்டும். ஒரு ஏக்கரில் சாகுபடி செலவு உத்தேசமாக ரூ.7,000 ஆகும். ஒரு ஏக்கரில் 30 மூட்டைகள் (மூட்டை 60 கிலோ) மகசூல் எடுக்கலாம்.

நெல் விற்பனை சாகுபடி செலவு போக ரூ.5,000 லாபம் எடுக்கலாம். ஒரு ஏக்கரில் வைக்கோல் விற்பனையில் ரூ.1,000 எடுக்கலாம். நெல்லினைத் தொடர்ந்து மணிலா சாகுபடி: ஜே 13 நெல்லினை அறுவடை செய்த பிறகு விவசாயிகள் நிலத்தை நன்கு உழுது அதிலுள்ள அடித்தாள்களை அகற்ற வேண்டும். பிற அந்த மண்ணில் விஆர்ஐ 2 மணிலாவை (வயது 105 நாட்கள்) சாகுபடி செய்யலாம். பொருளாதாரம்: விவசாயிகள் இறவை மணிலாவை சாகுபடி செய்தால் ஒரு ஏக்கரில் தரமான காய்கள் 25 மூட்டைகள் (மூட்டை 40 கிலோ) மகசூலாக

எடுக்கலாம். மணிலா மூட்டை விலை ரூ.600 என்றால் வரவு ரூ.15,000 எடுக்கலாம். செடிகளை கறவை மாடுகளுக்கு தீவனமாகவும் உபயோகிக்கலாம். இல்லையேல் செடிகளை நன்கு காயவைத்து நெல் பயிருக்கு உரமாக இடலாம். நல்ல பயன் கிடைக்கும்.

விவசாயிகள் விவசாயத்தில் அதிக அக்கறை காட்டி நல்ல லாபம் எடுப்பதோடு தனது அனுபவத்தால் இரண்டு பயிர்களை சாகுபடி செய்து பயன் அடையலாம். பல விவசாயிகள் ஜே 13 நெல் ரகம் குறைந்த வயதினைக் கொண்டதால் (100 நாட்கள்) அந்த ரகத்தை தொடர்ந்து விடாமல் சாகுபடி செய்கிறார்கள். அதே போல் மணிலாவை சாகுபடி செய்து குறுகிய காலத்தில் நல்ல லாபம் எடுக்கின்றன்றார்கள்.

- எஸ்.எஸ்.நாகராஜன்

## சின்ன சின்ன செய்திகள்

நெல் சாகுபடி- ஊட்டச்சத்து மேலாண்மையில் புதிய உத்திகள்:தழைச்சத்து பயிர்களுக்கு அளிக்கும் போது வீணாகாமல் தடுக்கவும் நெற்பயிரின் இலைகளின் தழைச்சத்தின் அளவைக் கண்காணித்து அதனை துல்லியமாக பச்சையத்தை அளிக்கும் கருவி (குளேரோபில் மீட்டர்) மூலம் தெரிந்து தேவைப்பட்டால் மட்டுமே மேலுரமிட பரிந்துரைக்கப்படுகிறது. இந்த கருவி விலை அதிகம் என்பதாலும் எல்லா உழவர்களாலும் வாங்க இயலாது என்பதாலும், பச்சை வண்ண அட்டையைக் குறைந்த (ரூ.40) விலையில் தயார் செய்துள்ளனர். மிகவும் வெளிறிய நிறத்தையும் (எண்.1) மிகவும் அடர்ந்த பச்சை நிற பட்டையையும் (எண்.6) நீக்கி விட்டு 4 நிறப்பட்டைகளைக் கொண்ட இலை வண்ண அட்டையை உருவாக்கி உழவர்களின் பயன்பாட்டிற்காக அறிமுகப்படுத்தியது, த.வே.ப.கழகம் பட்டை எண்.4ஐ உழவர்கள் தழைச்சத்து இடும் தேவையைத் தீர்மானித்து பயன்படுத்தலாம். அட்டையில் வெளறியபச்சை (எண்.2) நிறத்திலிருந்து கரும்

பச்சை (எண்.5) நிறம் வரையிலான நான்கு விதமான பச்சை வண்ணப்பட்டைகள் உள்ளன.

இந்த அட்டையைப் பயன்படுத்தி நிர்ணயிக்கப்பட்ட குறியீட்டு அளவு 4க்கு கீழ் இருந்தால் குறுவைப் பயிருக்கு ஒவ்வொருமுறையும் எக்டருக்கு 35 கிலோ தழைச்சத்தும், சம்பா, தாளடி பயிருக்கு எக்டருக்கு 30 கிலோ தழைச்சத்து நட்ட 14ஆம் நாளிலிருந்து பூக்கும் தருணம் வரை இட வேண்டும். இந்த முறையில் எக்டருக்கு 20 முதல் 40 கிலோ வரை தழைச்சத்து சேர்க்கப்படுவதால் உழவருக்கு ரூ.235 - 470 உரை உரச்செலவு குறையும். இது மட்டுமல்லாமல் தழைச்சத்து தேவைக்கேற்ப இடுவதால் இச்சத்தின் பயன்பாட்டுத்திறன் அதிகரிப்பதோடு பூச்சிநோய் தாக்குதலின் அளவுக் குறையும்.

மண் ஆய்வு மேற்கொள்ளாத நிலத்திற்கு உர மேலாண்மை: நடவு வயல் மண் ஆய்வு செய்யப்படாத நிலமாக இருந்தால் பொதுவாக பரிந்துரைக்கப்படுகின்ற உர அளவை இட வேண்டும். நீண்ட கால சம்பா, மத்திய கால ரகங்களுக்கு எக்டருக்கு 150 கிலோ தழை, 50 கிலோ மணி, 50 கிலோ சாம்பல் சத்துக்களை இடவேண்டும். இதைத்தவிர எக்டருக்கு 500 கிலோ ஜிப்சம், 25 கிலோ துத்தநாக சல்பேட்டும் இடவேண்டும். இவை சுண்ணாம்பு கந்தகம், துத்தநாக சத்தை அளிக்கிறது. நடவு செய்யும் முன் எக்டருக்கு 2 கிலோ அசோஸ்பைரில்லம், 2 கிலோ பாஸ்போ பாக்டீரியா போன்ற உயிர் உரங்களை 50 கிலோ மணலுடன் கலந்து சீராகத் தூவ வேண் டும். மேலும் நடவு செய்த 7-10 நாட்களில் எக்டருக்கு 10 கிலோ நீலப்பச்சைப்பாசி, 25 கிலோ தொழு உரத்துடன் கலந்து இட வேண்டும்.

நானோ தொழில்நுட்பம்: அணுத்துகள்களை மாற்றங்களுக்கு உட்படுத்தி, அவற்றினை மிகச் சிறியவையாக மாற்றுவதால், அவற்றின் வீரியத்தை அதிகப்படுத்தி, அந்த தருணத்தை நமக்கு தேவையான தசைகளில் பயன்படுத்திக்

கொள்ளுதலே நானோ துகள் தொழில்நுட்பம்.

தற்போதுள்ள துல்லிய விவசாயப் பண்ணைத்திட்டத்திலும் நானோ தொழில்நுட்பத்தை பயன்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதில் அதிகமாக இடப்படும் இடுப்பொருட்களின் அளவினைக் குறைத்து, ஏற்கனவே கிடைப்பதை விட, அதிக அளவு மகசூலை எடுப்பதே தற்போதைய நானோவின் அடிப்படை கொள்கை. பூச்சி மருந்துகளிலும், களைக்கொல்லிகளிலும் நானோ தொழில்நுட்பம் அமல்படுத்தப்பட்டு வருகிறது.

100-250 nm அளவுகளில், அதாவது நானோ அளவுகளில் நிறைய நிறுவனங்கள் மருந்துகளைக் கண்டறிய ஆரம்பித்துள்ளன. இவை தற்போதுள்ள துகள்களை விட, நீரில் எளிதில் கரையும் தன்மையுடையவனாய் உள்ளன.

சர்வதேச அளவில் மிகவும் பிரபலமாக உள்ள சின்ஜெண்டா "Primo MAXX' எனப்படும் பயிர் வளர்ச்சி ஊக்கியில் நானோ எமலி'சனை பயன்படுத்தியுள்ளது. இதனைப் பயன்படுத்தினால், பயிர் வளர்ச்சிப் பருவத்தில் வறட்சியினால் ஏற்படும் சோர்வினை தவிர்த்து பயிர் செழுமையாக வளரும் என்கின்றனர்.

சின்ஜெண்டா தருவது இன்னொரு நானோ கேப்ஸ்யூல் வடிவில் உள்ள கராத்தே கீ Zeon இதுவும் உக் (யூரோப்பியன் யூனியன்)வில் தான் விநியோகப்படுத்தி, நெல், பருத்தி,சோயாவில் பூச்சிகளுக்கு எதி ராகச்செயலாற்ற கராத்தே ஜியான் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

நானோ தொழில்நுட்பத்தில் விளைச்சல் பன்மடங்கு அதிகரிக்கிறது. இலையில் பச்சயம் அதிகரிக்கிறது. இதன் விளைவால் ஒளிச்சேர்க்கை அதிகமாவதால் பூக்கள், காய்கள் மற்றும் பழங்கள் அதிகரிக்கிறது.

மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: Prof. P.Rajasekaran, Chairman, Managing Director, Innovative Nano Bio Techformulation, Old No. 34/1, New No. 73/1, 7th Avenue, Ashok Nagar,

Chennai 600 083.செல்: 93809 54559.

டாக்டர். கு.செளந்தரபாண்டியன்

### "இயற்கைக்கு' வழிகாட்டும் பசுந்தாள் உரங்கள்

பசுந்தாள் உரப் பயிர்களான சணப்பு, தக்கைப்பூண்டு, மணிலா அகத்தி ஆகியவை, காற்றில் உள்ள நைட்ரஜனை தன்னுள் நிலைநிறுத்தி, மண்ணின் வளத்தை மேம்படுத்தும். தக்கைப்பூண்டு மற்றும் கொழிஞ்சி பயிர்கள், நிலத்தின் அமில, காரத் தன்மையை நீக்கும் தன்மை கொண்டது. இவை மற்ற பயிர்களைப் போல, சான்று பெற்ற விதைகளாக உற்பத்தி செய்யப்படுவதில்லை. விவசாயிகளுக்கு பசுந்தாள் உர விதை உற்பத்தி குறித்த விழிப்புணர்வு அவசியம்.

ரசாயன உரங்களை தொடர்ந்து பயன்படுத்துவதால், மண்வளம் கெடுகிறது. மேலும் யூரியா அதிகம் பயன்படுத்தப்படுகிறது. விலையும் அதிகரித்து வருகிறது. ஒரு போக, இருபோக நெல் சாகுபடிக்கு தழைச்சத்து அதிகம் தேவைப்படும். உழவுக்கு 40 நாட்களுக்கு முன், நிலத்தில் பசுந்தாள் உர விதைகளை விதைக்கலாம். 40 நாட்கள் கழித்து, அதாவது பூக்கும் பருவத்திற்கு முன், மண்ணோடு சேர்த்து உழுதபின், நெல் சாகுபடிக்கு தயார் செய்யலாம். ஒரு எக்டேருக்கு 60 -முதல் 70 கிலோ தழைச்சத்தின் பயன்பாட்டை, பசுந்தாள் உரம் ஈடுகட்டும். 20டன் வரை கிடைப்பதால் தழைச்சத்தோடு, சுண்ணாம்பு, நூண்ணூட்டச் சத்துக்கள் கிடைக்கின்றன.

நிலத்தின் நீர் தேக்கத் தன்மை, மண்ணில் காற்றோட்டத்தை அதிகரிக்கிறது. 15 முதல் 20 சதவீத பயிர் விளைச்சலை அதிகரிக்கிறது. நிலத்தை உழும் போது, அடிப்பகுதி அடுக்கில் உள்ள ஊட்டச்சத்துக்களை உறிஞ்சி, மேல்மட்டத்திற்கு கொண்டு வருகிறது. இனி வரும் காலங்களில், இயற்கை வேளாண்மைக்கு வழிகாட்டுவது, பசுந்தாள் உரங்கள் தான். பசுந்தாள் உர விதை உற்பத்தி குறித்து, விவசாயிகளுக்கு பயிற்சி தரப்படுகிறது.

கொ.பாலகிருஷ்ணன், துறைத் தலைவர், ப. மாசிலாமணி, பேராசிரியர்,
விதை நுட்ப அறிவியல் துறை,
மதுரை விவசாயக் கல்லூரி.

## சத்தமில்லாமல் அரசு துவங்கியது வைக்கோல் விற்கும் திட்டம்




கால்நடைகளுக்கு தீவனப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதால், மானிய விலையில், மாடுகளுக்கு வைக்கோல் விற்கும் திட்டத்தை, அரசு துவக்கியுள்ளது. இதற்கென விவசாயிகளிடம் இருந்து, வைக்கோல் கொள்முதல் செய்யப்படுகிறது.

கடந்த சில ஆண்டுகளாகவே, பருவமழை சரியாக பெய்யவில்லை. வறட்சியில் விளைந்த வைக்கோலையும், கேரள வியாபாரிகள், கூடுதல் விலை கொடுத்து வாங்கிச் செல்கின்றனர். இதனால், தமிழகத்தில், கால்நடைகளுக்கு தீவன தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் உள்ளது. இந்நிலையில், வரும் மார்ச், ஏப்ரல், மே மாதங்களில், கடும் வெப்பம் நிலவும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால், கால்நடை வளர்க்கும் விவசாயிகளின் சிரமத்தை சமாளிக்க, அரசே கால்நடைகளுக்கு மானிய விலையில், வைக்கோல் விற்கும் திட்டத்தை அறிமுகம் செய்துள்ளது.இத்திட்டத்தில், கால்நடை வளர்ப்போருக்கு, ஒரு பசு அல்லது காளை, எருமை மாட்டிற்கு, நாள் ஒன்றுக்கு, 3 கிலோ வைக்கோலை, கிலோவுக்கு, 2 ரூபாய் வீதம், வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. வாரந்தோறும் இந்த விற்பனை

நடக்கும். ஒருவருக்கு, அதிகபட்சமாக, ஐந்து மாடுகளுக்கு, வைக்கோல் வழங்கப்படும்.இத்திட்டம், கோடை காலத்திற்கு மட்டுமே, என, அறிவிக்கப்பட்டுள்ளது.

**மாற்றி யோசித்த ஆனைமலை விவசாயிகள்: தக்காளி விலை சரிவு: கொத்துமல்லி சாகுபடியில் சாதனை!**




**ஆனைமலை**:ஆனைமலை சுற்று வட்டாரப்பகுதிகளில், தக்காளி விலை சரிவால் பாதிக்கப்பட்ட குறு விவசாயிகள், தற்போது மாற்றுப் பயிராக கொத்துமல்லி தழை பயிரிட்டு, அதிக வருவாய் ஈட்டி சாதனை புரிந்து வருகின்றனர்.
இன்றைய சமையலில் தவிர்க்க முடியாத பொருளாக தக்காளி இடம் பெற்றுள்ளது. இதை பயிரிட்ட விவசாயிகள், தற்போது, தக்காளிக்கு உரிய விலை கிடைக்காமல், பெரும்பாலானவர்கள் நஷ்டத்தை சந்தித்து வருகின்றனர். ஒரு கிலோ தக்காளி, தற்போது அதிகப்பட்ச விலையாக ரூ. 3க்கு மார்க்கெட்டில் விற்பனையாகிறது. விலைகுறைவாக இருப்பதால் விவசாயிகள் அதிருப்தியடைந்துள்ளனர்.
இந்நிலையில், இச்சாகுபடியில் ஈடுபட்டு வந்த சில விவசாயிகள், மாற்றி யோசித்து கொத்துமல்லி தழை சாகுபடியில் ஈடுபட்டு அதிக வருவாய் ஈட்டி வருகின்றனர்.

சாகுபடி முறை:

நாற்பது நாள் பயிரான கொத்துமல்லி தழை சாகுபடியில், ஒரு ஏக்கருக்கு மூன்று டன் வரை மகசூல் பெறுகின்றனர். ஒரு ஏக்கருக்கு 15 கிலோ விதை மட்டுமே

தேவைப்படும். நிலத்தினை உழுது , தொழு உரம் இறைத்து, பாத்தி கட்ட வேண்டும். பின்பு நீர் பாய்ச்சப்பட்ட நிலத்தின், ஈர மண்ணில் கொத்துமல்லி விதைகளை தூவி, நிலத்தினை கீறி விட வேண்டும். நான்கு நாட்களுக்கு ஒரு முறை என 40 நாட்களில் 10 முறை தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.

பராமரிப்பு:

செடியின் வளர்ச்சியை கணக்கிட்டு அடி உரமாக, தழைச்சத்து 10 கிலோ; மணிச்சத்து 40 கிலோ; சாம்பல் சத்து 20 கிலோ என்ற விகிதத்தில் உரத்தை இட வேண்டும். மேலும் 20 வது நாளில் 10 கிலோ தழைச்சத்து தர வேண்டும். செடி நன்கு வளரும் சமயத்தில் வேர்ப்புழு விழும். இதனைக்கட்டுப்படுத்தவும், அசுவினி பூச்சியின் தாக்குதலை கட்டுப்படுத்தவும், மருந்து அடிக்க வேண்டும். உரம் இடுதல், பூச்சி தாக்குதலை கட்டுபடுத்துதல், நீர் மேலாண்மை ஆகியவை சரியாக மேற்கொள்ளப்பட்டால் ஏக்கருக்கு 40 நாட்களில் 40 ஆயிரம் வருவாய் ஈட்டலாம்.

**லாபம் எவ்வளவு கிடைக்கும்?**

ஆனைமலை பகுதியில் கொத்துமல்லி விவசாயத்தில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் கூறியதாவது: கொத்துமல்லி விவசாயத்தில் வரவு செலவு கணக்கு என்பது ; உழவு பணிக்கு ரூ.3,000ம், பாத்தி அமைக்க ரூ.2,800, கொத்துமல்லி விதைகள் ரூ.6,200, நிலத்தில் விதைகளை கீறிவிட ஆட்கள் கூலி ரூ.1,500; வேர்ப்புழு, அசுவினியை கட்டுபடுத்த மருந்து அடிக்கும் செலவு ரூ.850, உரத்துக்கு ரூ.1,800, பறிப்புக்கூலி 2,000 என மொத்தம் ரூ.18 ஆயிரத்து 150 ஒரு ஏக்கருக்கு சாகுபடி செலவு ஏற்படுகிறது. மகசூல் ஏக்கருக்கு 3,000 கிலோ வரை கிடைக்கும். சந்தையில் விலை, ஏற்றம் இறக்கம் நிலவும் காலங்களை கணக்கிட்டால், சராசரியாக கிலோ ரூ.20க்கு போகும். ஒரு ஏக்கருக்கு 60 ஆயிரம் ரூபாய் வரை வருவாய் கிடைக்கும். இதில், முட்டுவளிச் செலவை கழித்தால் (சாகுபடி செலவு) நிகர லாபமாக ரூ. 41 ஆயிரத்து 850 ரூபாய் கிடைக்கும். ஆண்டு முழுவதும் 7 முறை சாகுபடியில் ஈடுபட முடியும். இதனால், ஆண்டுக்கு இரண்டு லட்சத்து 80 ஆயிரம் ரூபாய் வரை லாபம் கிடைக்கும். இவ்வாறு விவசாயிகள் கூறினர்.

## 5362 மெ. டன்உரம் இருப்பு

**ராமநாதபுரம்:** ராமநாதபுரம் மாவட்ட உரக்கடைகளில் 5362 மெட்ரிக் டன் உரங்கள் இருப்பு வைக்கப்பட்டு உள்ளது. மாவட்ட வேளாண் இணை இயக்குனர் கிருஷ்ணமூர்த்தி: ராமநாதபுரம் மாவட்டத்தில், டி.ஏ.பி. 1252 மெட்ரிக் டன், பொட்டாஷ் 189, கூட்டு உரங்கள் 1283, யூரியா 1638 மெட்ரிக் டன் உரங்கள், தனியார், தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ளன, என்றார்.

## ரூ.2 மானியத்தில் உலர் வைக்கோல்

**ராமநாதபுரம்**: மாவட்டத்தில் கால்நடை வளர்ப்போர் நலன் கருதி, மானிய விலையில் உலர் வைக்கோல் வழங்க முதல்கட்டமாக 70 லட்ச ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக, கால்நடை துறை மண்டல இணை இயக்குனர் அன்பழகன் தெரிவித்தார்.

அவர் கூறியதாவது: கால்நடைகளுக்கு தேவையான உலர் வைக்கோல், மானிய விலையில் வழங்க அரசு முடிவு செய்துள்ளது. முதல்கட்டமாக 70 லட்ச ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஒரு கிலோ வைக்கோல் ரூ.2 வீதம் ஒரு மாட்டிற்கு ஒரு நாளைக்கு 3 கிலோ வீதம் அதிகபட்சம் 5 மாடுகளுக்கு வாராந்திர தேவையின் அடிப்படையில் வாரம் ஒரு முறை வழங்கப்படும். சூரங்கோட்டை, ஆர்.எஸ்.மங்கலம், உச்சிப்புளி, முதுகுளத்தூர், நயினார்கோவில், கமுதி, பார்த்திபனூரில் உள்ள, கால்நடை மருத்துவமனைகளில் தீவன கிடக்கு அமைக்கப்படவுள்ளது. கால்நடை வளர்போர் ரேஷன் கார்டு நகல், பாஸ்போர்ட் சைஸ் போட்டோ இரண்டு, மற்றும் கால்நடைகளின் இருப்பு விபரம் ஆகியவற்றை அருகில் உள்ள கால்நடை மருந்தகங்களில் பதிவு செய்த பின் அட்டை வழங்கப்படும். கூடுதல் விபரங்களுக்கு, 94450 01118ல் தொடர்பு கொள்ளலாம், என்றார்.

## இலவச கால்நடைசிறப்பு முகாம்

**முதுகுளத்தூர்:** கீழக்காஞ்சிரங்குளத்தில் கால்நடை சிகிச்சை சிறப்பு முகாம், ஊராட்சி தலைவர் சங்கரவேல் தலைமையிலும், எம்.எல்.ஏ., முருகன், மாவட்ட பஞ்., தலைவர் சுந்தரபாண்டியன், ஒன்றிய கவுன்சிலர் சிவக்குமார் முன்னிலையிலும் நடந்தது. இலவச தீவனம், மருந்துகளை அமைச்சர் சுந்தரராஜ் வழங்கினார். முதுகுளத்தூர் ஒன்றிய செயலாளர்கள் தர்மர்(முதுகுளத்தூர்), முனியசாமிபாண்டியன் (கடலாடி), மாவட்ட இளைஞரணி துணை தலைவர் சுந்தரமூர்த்தி, ஒன்றிய மீனவரணி செயலாளர் முருகேசன், ஜெ., பேரவை மாவட்ட பொருளாளர் மலைக்கண்ணன், ஒன்றிய இளைஞரணி இணை செயலாளர் செந்தில்குமார், ஒன்றிய ஜெ., பேரவை தலைவர் பரம்பொருள் காளிமுத்து, கால்நடை உதவி டாக்டர் சிவக்குமார், ரவிச்சந்திரன் பங்கேற்றனர்.

## கால்நடை மருத்துவமனைகளுக்கு 54 குளிர் சாதன பெட்டிகள்

**காஞ்சிபுரம் :** மாவட்டத்திலுள்ள கால்நடை மருத்துவமனைகளுக்கு, 54 குளிர் சாதனப் பெட்டிகளை, கால்நடைத்துறை ஒதுக்கீடு செய்துள்ளது. காஞ்சிபுரம், சிட்லபாக்கம், மதுராந்தகம், செங்கல்பட்டு ஆகிய மண்டலங்களில், 114 கால்நடை மருத்துவமனைகள் உள்ளன.இவற்றில், பெரும்பாலான மருத்துவமனைகளில், குளிர் சாதனப் பெட்டிகள் பழுதடைந்தும், சிலவற்றில் இல்லாமலும் உள்ளன. இதனால், புதிய குளிர் சாதனப் பெட்டிகள் வழங்கக் கோரி, கால்நடை நிர்வாகம், அரசுக்கு பரிந்துரை செய்திருந்தது. அதன்படி, காஞ்சிபுரம் மாவட்டத்திற்கு, 54 குளிர் சாதனப் பெட்டிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளன."இன்னும் ஓரிரு வாரங்களில், தெரிவு செய்யப்பட்ட மருத்துவமனைகளுக்கு, குளிர் சாதனப் பெட்டிகள் வழங்கப்படும்," என,

கால்நடை துறை இணை இயக்குனர் கோவர்த்தனன் தெரிவித்தார்.

## நுண்ணூட்ட உயிர் உரம் பெற விண்ணப்பம் வரவேற்பு

**காஞ்சிபுரம் :** மாவட்டத்தில் உள்ள விவசாயிகள், நுண்ணூட்ட உயிர் உரங்கள் பெற, வட்டார வேளாண் மையங்களை அணுகலாம் என, வேளாண்மை துறை அறிவித்து உள்ளது.

இதுகுறித்து வேளாண் இணை இயக்குனர் சவுந்தரராஜன் அறிவித்து உள்ளதாவது: காஞ்சிபுரம் மாவட்ட விவசாயிகளுக்கு, 1.26 கோடி ரூபாய் மதிப்பில், நுண்ணூட்ட உயிர் உரங்கள் வழங்க, அரசு உத்தரவிட்டு உள்ளது. இதில், சுடோமோனோஸ், ஜிப்சம் உள்ளிட்ட நுண்ணூட்ட உயிர் உரங்கள் வழங்கப்பட உள்ளன. இதை வாங்க விரும்பும் விவசாயிகள், அந்தந்த வட்டார வேளாண் மையங்களில் உள்ள, வேளாண் அலுவலர்களிடம் விண்ணப்பித்து பயன்பெறலாம்.

இவ்வாறு, அவர் அறிவித்துள்ளார்.

## மலை வேம்பு பயிரிட விவசாயிகள் ஆர்வம் : அதிக லாபம் தருவதால் மகிழ்ச்சி

**கச்சிராயபாளையம் :** கச்சிராயபாளையம் பகுதியில் மரப்பயிர்கள் அதிக லாபம் தருவதால் சாகுபடி செய்வதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். கச்சிராயபாளையம் பகுதியில் விவசாயிகள் மரப்பயிர்களான தெண்ணை, தேக்கு, மா, பாக்கு, பாமாலின் போன்ற மரங்களை நவீன முறையில் பயிரிட்டனர். தற்போது விவசாயிகள் மலைவேம்பு பயிரிடுவதில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். பிளைவுட், காகிதம், பலகை, மரச்சாமான்கள் மற்றும் தீக்குச்சி தயாரிப்பதில் மலைவேம்பு அதிக அளவில் பயன்படுவதால் வணிக ரீதியாக இதனை விவசாயிகள் பயிரிட்டு வருகின்றனர். மிலியேசி குடும்பம் மிலியேசி குடும்பத்தை சேர்ந்த மலைவேம்பில் துலுக்கு வேம்பு, மீலியாடுபியா என இரண்டு வகைகள் உள்ளன. இதில் துலுக்கு வேம்பு வகையில் அதிக கிளைகள் தோன்றுவதால் மீலியாடுபியா வகையே பயிர் செய்ய ஏற்றது. குறுகிய காலத்தில்

மற்ற மரங்களை விட மலை வேம்பு விரைந்து வளரும். 20-30 மீட்டர் உயரம் வரை வளரும். மலை வேம்பு பயிரிட குறைந்த அளவு தண்ணீரும் வடிகால் வசதியுள்ள நிலம் போதுமானது. மணல்கலந்த வண்டல் மண்ணில் செழித்து வளரும்.

நடவுமுறை நன்கு உழுத வயலில் 10 அடி இடைவெளியில் 2 அடி ஆழம், 2 அடி அகலம் கொண்ட குழி அமைத்து செடியினை நடவு செய்யப்படுகிறது. 1 ஏக்கருக்கு 400 செடிகளை நடவு செய்யலாம். கன்றுகளின் விலை ரூ 15-20ல் தனியார் பண்ணைகளிலும் கிடைக்கிறது. குளோனிங் முறையில் உருவாக்கப்பட்ட செடிகள் 7 ரூபாய்கு கிடைக்கிறது.

உரமிடுதல் கன்றுகளை நடும் முன் 1 கிலோ மண்புழு உரம், 1 கிலோ தொழுஉரம், 15 கிராம் அசோஷ்பைரில்லம், 30 கிராம் வேம் ஆகியவை குழியில் இட்டு பாக்கெட்டுகளில் உள்ள மண் கட்டி உடையாமல் எடுத்து நட வேண்டும்.

பராமரிப்பு மலைவேம்பு பயிருக்கு வாரம் ஒரு முறை தண்ணீர் விட்டால் போதுமானது. முதல் 3 ஆண்டுகள் வரை மழைக் காலங்களுக்கு முன்பு களை எடுத்தல் வேண்டும். இதனால் இப்பயிரில் பராமரிப்பு செலவினங்கள் மிகவும் குறைகிறது. மலைவேம்பில் 1 ஆண்டுக்கு பின் மஞ்சள், வாழை, உளுந்து, காய்கறிகள் , மிளகு போன்றவைகளை ஊடு பயிராக பயிரிடலாம். இதனால் விவசாயிகளுக்கு இரட்டிப்பு வருமானம் கிடைக்கிறது. பயன்கள் ஒரு ஏக்கரில் 9 ஆண்டுகளில் 20 லட்சம் வரை வருமானம் கிடைக்கும் என விவசாயிகள் கூறுகின்றனர். மூன்று ஆண்டுகள் வளர்ந்த மரங்கள் காகித தொழிற் சாலைக்கு பயன்படுகிறது. 4 ம் ஆண்டில் தீக்குச்சி தயாரிப்பிற்கும், 5-6 ஆண்டுகள் வளர்ச்சியடைந்த மரங்கள் பிளைவுட் தயாரிக்கவும், 7 ஆண்டுகளுக்கு மேல் வளர்ந்த மரங்கள் பலகை மற்றும் மரச்சாமான் கள் செய்யவும் பயன்படுகிறது. இதற்கு அரசின் வேளான் அறிவியல் மையம் மற்றும் வனவியல் துறையும் ஆலோசனைகளை வழங்குகிறது. மலை வேம்பின் தேவை அதிகம் இருப்பதால் விவ சாயிகளுக்கு வேண்டிய ஆலோசனைகள் தருவதோடு மரங்களையும் தனியார்

நிறுவனத்தினர் பெற்றுச் செல்கின்றனர். இதனால் விவசாயிகளுக்கு மரங்களை விற்பனை செய்வது எளிதாகிறது.குறைந்த செலவில் அதிக லாபம் கிடைப்பதால் கச்சிராயபாளையம் பகுதியில் விவசாயிகள் அதிக அளவில் மலைவேம்பினை பயிர் செய்கின்றனர்.

## உழவர் நண்பர்களுக்கு சிறப்பு பயிற்சி

**திண்டிவனம் :** வேளாண் துறை சார்பில் ஆத்மா திட்டத்தின் கீழ் உழவர் நண்பர்களுக்கு சிறப்பு பயிற்சி முகாம் நடந்தது. டாக்டர் அரிதாஸ் எம்.எல்.ஏ தலைமை தாங்கி துவக்கி வைத்தார். மரக்காணம் ஒன்றிய துணை சேர்மன் பாண்டுரங்கன், துணை இயக்குனர் ராஜாமணி, உதவி இயக்குனர் கென்னடி ஜெபக்குமார் முன்னிலை வகித்தனர். டாக்டர் அரிதாஸ் எம்.எல்.ஏ, உழவர் நண்பர்களிடம் விவசாயிகளுக்கு வழங்குவதற்கான ஒருங்கிணைந்த அடையாள அட்டைகளை, சொட்டு நீர் பாசன கருவிகள் ஊக்கத் தொகை ஆகியவற்றை வழங்கி பேசினார்.

ஒன்றிய கவுன்சிலர் விஜயகுமார், கூட்டுறவு சங்க தலைவர்கள் மணிமாறன், நாராயணன், பிரேம் குமார், ஆலங்குப்பம் பஞ்., தலைவர் ராமலிங்கம் உள்பட பலர் கலந்து கொண்டனர். முகாம் ஏற்பாடுகளை வேளாண்மை அலுவலர் எத்திராஜ், ஆத்மா தொழில்நுட்ப மேலாளர் செந்தில்குமார் செய்திருந்தனர்.

## பருத்தி சந்தையில் ரூ.2.25 கோடிக்கு வர்த்தகம்

**கள்ளக்குறிச்சி** : கள்ளக்குறிச்சி பருத்தி வார சந்தையில் நேற்று ரூ.2.25 கோடிக்கு வர்த்தகம் நடந்தது. கள்ளக்குறிச்சி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நேற்று நடந்த பருத்தி வார சந்தையில் விழுப்புரம், சேலம், கடலூர், பெரம்பலூர், திருவண்ணாமலை உள்ளிட்ட மாவட்டங்களிலிருந்து நேற்று 1,112 விவசாயிகள் 12 ஆயிரம் பஞ்சு மூட்டைகளை விற்பனைக்கு கொண்டு

வந்தனர். திண்டுக்கல், தேனி, திருப்பூர், சேலம், கோயம்புத்தூர், வேலூர், விழுப்புரம் பகுதியைச் சேர்ந்த வியாபாரிகள் பலர் பஞ்சு மூட்டைகளுக்கு விலை நிர்ணயம் செய்தனர். எல்.ஆர்.ஏ.. பஞ்சு ரகம் ஒரு குவிண்டால் அதிகபட்சம் ரூ.5,256, குறைந்தபட்சம் ரூ.4,810க்கு விலை போனது. அதேபோல் சுவீன் பஞ்சு ரகம் ஒரு குவிண்டால் அதிகபட்சம் ரூ.7,197, குறைந்தபட்சம் ரூ.6,800க்கு விலை போனது. நேற்று 2 கோடியே 25 லட்சம் ரூபாய்க்கு வர்த்தகம்நடந்தது.

## வாழை காப்பீடு செய்ய அடங்கல் கட்டாயம்

**திருப்புவனம்**: திருப்புவனம் தாலுகாவில் வாழை பயிருக்கு இன்சூரன்ஸ் செய்ய அடங்கல் படிவம் கட்டாயம் வேண்டும் என தோட்டக்கலைத்துறையினர் தெரிவித்து உள்ளனர். திருப்புவனம் வட்டாரத்தில் 400 எக்டேரில் வாழை பயிரிடப்படுகிறது. வறட்சி, வெள்ளம், நோய் தாக்குதலினால் பாதிக்கப்படும் விவசாயிகளுக்கு இன்சூரன்ஸ் வழங்கப்படுகிறது. திருப்புவனம் வட்டாரத்தைச் சேர்ந்த கலியாந்தூர், திருப்பாச்சேத்தி, கானூர், மாரநாடு உள்ளிட்ட கிராம விவசாயிகள் வாழைக்கு இன்சூரன்ஸ் செய்து பயன்பெறுமாறு தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் கல்யாணசுந்தரம் தெரிவித்து உள்ளார். அவர் கூறியதாவது: வாழைக்கு ஏக்கருக்கு அரசு மானியம் போக பிரிமியம் தொகை 11 ஆயிரத்து 93 ரூபாய். கணக்கு வைத்துள்ள வங்கிகளில் அல்லது கூட்டுறவு வங்கிகளில் விவசாயிகள் செலுத்த வேண்டும், பாதிப்புக்குள்ளாகும் விவசாயிகளுக்கு இன்சூரன்ஸ் தொகையாக 3 லட்சத்து 69ஆயிரத்து 700 ரூபாய் கிடைக்கும். பிரிமிய தொகை செலுத்த பிப்ரவரி 28ம் தேதி கடைசி நாள் என தெரிவித்துள்ளார்.மேலும் காப்பீடு செய்யும் விவசாயிகள் அடங்கல், நில அளவை பதிவேடு ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

## திருந்திய நெல் சாகுபடி விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை

**திருத்தணி :** திருந்திய நெல் சாகுபடி முறையில் பயிரிடப்படும் விவசாயிகளுக்கு, ஒரு ஹெக்டேருக்கு, 3,000 ரூபாய் ஊக்கத்தொகை வழங்கப்படும் என, வேளாண்

துறை அறிவித்து செயல்படுத்தி வருகிறது.

திருத்தணி ஒன்றியத்தில், 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் நெல், வேர்க்கடலை, கரும்பு போன்றவைகளை அதிகளவில் பயிர் செய்து வருகின்றனர். விவசாயிகள் நெல் பயிர் அதிகளவில் செய்ய வேண்டும் என, வேளாண் துறை, ஊக்கத்தொகை வழங்குகிறது.

திருந்திய நெல் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு ஒரு ஹெக்டேருக்கு, 3,000 ரூபாய் வழங்கப்படுகிறது. 1,500 ரூபாய்க்கு விவசாய இடுபொருட்கள், 1,500 ரூபாய்க்கு காசோலையாக வேளாண் துறை வழங்குகிறது.

இதுகுறித்து, திருத்தணி வேளாண் துறை உதவி இயக்குனர் பிரசாத் கூறியதாவது: விவசாயிகள் சாதாரண முறையில் நெல் பயிரிடுவதை தவிர்த்து, திருந்திய நெல் சாகுபடி செய்ய வேண்டும். இதற்கு அரசு மானியம் (ஊக்கத்தொகை) வழங்குகிறது. நவரை பருவத்தில், 40 ஹெக்டேருக்கு ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது.

திருந்திய நெல் சாகுபடி செய்வதால், பயிர் செலவு குறைகிறது. அதே நேரத்தில் மகசூல் அதிகரிக்கிறது. இதுதவிர, கூலியாட்கள் பற்றாக்குறையை போக்குவதற்கு, நெற்பயிர் நடுதல், களை எடுத்தல் போன்ற வேலைகளை இயந்திரங்கள் மூலம் செய்து கொள்ளலாம்.

மேலும், பயிர் வளர்ச்சியும் அதிகரிக்கும். விவசாயிகள் அரசு சலுகை பெற திருந்திய நெல் சாகுபடி செய்வதற்கு அனைவரும் முன் வர வேண்டும்.இவ்வாறு, அவர் கூறினார்.

## இரும்பு சத்து நிறைந்த கோங்குரா கீரை

**ஆர்.கே.பேட்டை :** இரும்பு சத்து நிறைந்த கோங்குரா கீரை, மிளகாய் தோட்டத்தின் கரைகளில் வளர்க்கப்படுகிறது. இது, பயிருக்கு அரணாகவும், உடலுக்கு வலிமை சேர்ப்பதாகவும் பயன் அளிக்கிறது.

தமிழகத்தில் புளிச்சக்கீரை அன்றும், ஆந்திர மாநிலத்தில் கோங்குரா என்றும்

அழைக்கப்படும், இந்த கீரை புளிப்பு சுவை கொண்டது.

இரும்பு சத்து நிறைந்தது. புளிப்பு சுவை இருந்தாலும், புளி சேர்த்து சமைக்க வேண்டும்.பருப்பு கலந்து செய்யப்படும் கோக்குரா துவையல், ஆந்திரா உணவகங்களில் கோங்குரா மிகவும் பிரபலம். ஆறு அடி உயரம் வளரும் இந்த கீரை செடி, மிளகாய் தோட்டத்தின் கரைகளில் வளர்க்கப்படுகிறது. இதனால், மிளகாய் செடிகளுக்கு அரணாகவும், உணவில் சேர்த்துக் கொள்வதால், உடலுக்கு உறுதியையும் அளிக்கிறது.

பத்து செடிகள் கொண்ட கட்டு ஒன்று, ஐந்து ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. வேருடன் பிடுங்காமல் தண்டு மட்டும் வெட்டி எடுத்தால், மீண்டும் வளர்ந்து பலன் தரக்கூடியது.

விதை மூலமாகவும், புதிய செடிகள் வளர்க்கலாம். வெட்டி எடுத்த தண்டுகள் மூலமாகவும் புதிய செடிகள் துளிர்க்கும்.

## கால்நடைகளின் சொர்க்கபூமி பைவலசா சமவெளி

**ஆர்.கே.பேட்டை :** மயில்கள் ஆடும் மலையடிவாரம், கால்நடைகளுக்கு ஏற்ற மேய்ச்சல் நிலமாக உள்ளது. சிறந்த நீர்பிடிப்பு பகுதியாக உள்ளதால், ஆண்டு முழுவதும், பசுமையான புல்வெளி, ஆடு, மாடுகளுக்கு தீவனம் அளித்து வருகிறது. ஆர்.கே.பேட்டை ஒன்றியம் மயிலாடும்பாறை மலையில், மயில்களும், மான்களும் உள்ளன. இந்த மலையில் மேற்கு பகுதியில், பைவலசா சமவெளி உள்ளது. பைவலசா சிறந்த நீர்பிடிப்பு பகுதியாகும். இங்கு உருவாகும் ஓடை, சோளிங்கர், ஞானகொல்லி தோப்பு வழியாக, நந்தி ஆறாக பாய்கிறது.

பைவலசா சமவெளியில், ஆண்டு முழுவதும் பச்சைபசேலென புல் வளர்ந்திருப்பதால், ஆடு, மாடு உள்ளிட்ட கால்நடைகளுக்கு பசுந்தீவனம் தேவையான அளவிற்கு கிடைக்கிறது. இப்பகுதி விவசாயிகள் மட்டுமின்றி,

நாடோடிகளும் (பூம்பூம் மாட்டுக்காரர்கள்) இப்பகுதியில் சில மாதங்களுக்கு முகாமிட்டு, தங்கள் கால்நடைகளை வளர்க்கின்றனர்.

**நிலக்கடலை, பயறுக்கு ஜிப்சம்மானியம் வழங்க நடவடிக்கை**

**திண்டுக்கல்**: நிலக்கடலை உட்பட பயறு வகைகளின் தரத்தினை மேம்படுத்துவதற்காக விவசாயிகளுக்கு ஜிப்சம் உரம் 50 சதவீத மானியத்தில் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.
தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தின் கீழ் நிலக்கடலை மற்றும் பயறு வகைகளை சாகுபடி செய்துள்ள விவசாயிகளுக்கு தேவையான ஜிப்சம் உரத்தை 50 சதவீத மானியத்தில் வழங்க வேளாண்மை துறை முடிவு செய்துள்ளது. கால்சியம், கந்தகம் சத்துக்களை உள்ளடக்கிய ஜிப்சம் உரத்தை இடுவதால், காய்கள் திரட்சியாகவும், பொக்கு இல்லாமலும், எடை அளவு அதிகரித்தும் காணப்படும். அரசு உரிமம் பெற்ற உரக்கடைகளில் ஜிப்சம் 50 கிலோ மூடை ரூ. 140 க்கு விற்கப்படுகிறது. ஒரு ஹெக்டேருக்கு 110 கிலோ ஜிப்சம் தேவைப்படும். ஒவ்வொரு விவசாயியும் 50 சதவீத மானியத்தில் ஜிப்சம் உரத்தை ரூ. 7 ஆயிரத்து 700 க்கு பெற்றுக்கொள்ளலாம். இதனால் மண் வளம் பெருகுவதோடு, பயிரும் செழிப்பாக வளரும்.வட்டார வேளாண்மை விரிவாக்க அலுவலகங்களில் தொடர்பு கொள்ளும் விவசாயிகளுக்கு, தேவையான உரத்தினை பெறுவதற்கான வசதிகளை செய்து கொடுக்க அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**விவசாய கூட்டுறவு பணியாளர் பயிற்சி நிலையத்துக்கு விருது**

**சென்னை**: டெல்லியில் உள்ள தேசிய கூட்டுறவு கல்வி குழுமம், அகில இந்திய அளவில் சிறப்பாக செயல்பட்டு வரும் விவசாய கூட்டுறவு பணியாளர்கள் பயிற்சி நிலையங்களை தர ஆய்வு செய்து பரிசுகள் வழங்கி வருகிறது. இதில், மாதவரத்தில்

அமைந்துள்ள தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கியால் நிர்வகிக்கப்பட்டு வரும் விவசாய கூட்டுறவு பணியாளர் பயிற்சி நிலையம், அகில இந்திய அளவில் டெல்லியில் நடைபெற்ற விழாவில் 2வது பரிசு பெற்றது. தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கியின் தலைவர் (பொறுப்பு) ஆர்.இளங்கோவன் விருதை, அமைச்சர் செல்லூர் கே.ராஜூவிடம் காண்பித்தார்.

**பீன்ஸ் விலை உயர்வு**

**கோவை,** : கோவை ஆர்.எஸ்.புரம் உழவர்சந்தையில் கடந்த ஒரு வாரத்திற்கு முன்பு கத்தரிக்காய் விலை கிலோ ரூ.34 வரை விற்றது. பின்னர் படிப்படியாக குறைந்து நேற்று குறைந்தபட்ச விலை ரூ.8க்கும், அதிகபட்ச விலை ரூ.20க்கும் விற்றது. அதே போல் நேந்திரம் பழம் கடந்த ஒரு வாரத்திற்கு முன்பு வரை கிலோ ரூ.60 முதல் ரூ.65க்கு விற்றது. கடந்த ஒரு வாரமாக விலை குறைந்து நேற்று குறைந்தபட்ச விலை ரூ.10க்கும், அதிகபட்சம் ரூ.30க்கும் விற்றது.

அதே நேரத்தில் வெண்டைக்காய் கடந்த 10 நாட்களுக்கு முன்பு வரை கிலோ ரூ.28 முதல் ரூ.30 வரை விற்றது. படிப்படியாக உயர்ந்து நேற்று ரூ.36 வரை விற்றது. அதே போல் புஷ் பீன்ஸ் கடந்த 10 நாள்களுக்கு முன்பு வரை கிலோ ரூ.24 வரை விற்றது. இவை படிப்படியாக உயர்ந்து நேற்று ரூ.46 வரை விற்றது.

கத்தரிக்காய், நேந்திரம் பழம் விலை சரிவிற்கு வரத்து அதிகரித்ததும், வெண்டைக்காய், பீன்ஸ் ஆகியவை விலை உயர்விற்கு வரத்து குறைந்ததும் முக்கிய காரணங்களாக கூறப்படுகிறது.

இதற்கிடையில் கடந்த ஒரு மாதமாக நாட்டு தக்காளி கிலோ ரூ.2 முதல் 5 வரையும், ஆப்பிள் தக்காளி ரூ.2 முதல் 7 வரையும், சின்னவெங்காயம் ரூ.5 முதல் ரூ.22 வரையும், பெரிய வெங்காயம் ரூ.5 முதல் ரூ.15 வரையும், தேங்காய் ரூ.5 முதல் ரூ.18 வரையும் அதே நிலையில் உள்ளது. இதர காய்கறிகள் கிலோ ரூ.14 முதல் ரூ.18 வரை விற்கிறது.

**வியாபாரிகள் வராததால் விவசாயிகள் பல மணி நேரம் காத்திருப்பு**

**வாழப்பாடி**, : வாழப்பாடியில் சேலம் வேளாண்மை கூட்டுறவு உற்பத்தியாளர்கள் விற்பனை சங்க கிளையில் கடந்த வாரம் ஏலத்தில் எடுத்த பருத்தி மூட்டைகளை வியாபாரிகள் எடுத்துச் செல்லாததால் இந்த வார ஏலத்திற்கு வந்த விவசாயிகளின் வாகனங்கள் சாலையில் 2 கிமீ துரத்திற்கு அணி வகுத்து நின்றன.

வாழப்பாடியில் சேலம் வேளாண்மை கூட்டுறவு உற்பத்தியாளர்கள் விற்பனை சங்க கிளையில் வாரந்தோறும் புதன்கிழமை பருத்தி ஏலம் நடைபெறுவது வழக்கம். இதன்படி கடந்த வார ஏலத்தில் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட வியாபாரிகள், விவசாயிகள் கலந்து கொண்டனர்.

இதில் 11,500 மூட்டை பருத்தி கி3.5 கோடிக்கு விற்பனையானது. இந்த நிலையில் பருத்தி ஏலம் எடுத்த வியாபாரிகள் குறித்த நேரத்தில் சங்கத்தில் இருந்து மூட்டைகளை எடுத்துச் செல்லாமல் உள்ளனர். இதனால் இன்று (5ம் தேதி) நடைபெறும் ஏலத்திற்கு நேற்று( 4ம் தேதி) மதியம் முதல், விவசாயிகள் பருத்தி மூட்டைகளை கொண்டு வந்தனர். ஆனால் சங்கத்தில் கடந்த வார ஏலத்தில் எடுத்த மூட்டைகளை பெரும்பாலான வியாபாரிகள் எடுத்துச் செல்லாததால், விவசாயிகள் அவதிக்கு ஆளாயினர்.

இதனால் சுற்று வட்டார பகுதிகளில் இருந்து வந்த விவசாயிகளின் 200க்கும் மேற்பட்ட வாகனங்கள் சங்கத்தில் இருந்து ஆத்தூர் ரோடு பகுதி மற்றும் சேலம் ரோடு பகுதிகளில் சுமார் 2 கிமீ தூரத்திற்கு சாலையின் இருபுறமும் அணிவகுத்து நின்றன. காளியம்மன் ரோடு, வாழப்பாடி ரோடு, மன்னாய்க்கன்பட்டிரோடு, சந்தைப்பேட்டை ரோடு, வாழப்பாடி ஒன்றிய அலுவலகம் செல்லும் பாதை உள்ளிட்ட இடங்களில் கடும் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது. இது குறித்து சங்க அலுவலர்கள் கூறியதாவது:

சங்கத்தில் 12 ஆயிரம் மூட்டைகளை மட்டுமே இருப்பு வைக்க முடியும். ஆனால் கடந்த வாரம் நடந்த ஏலத்தில் 11 ஆயிரத்து 500 மூட்டையும், அதற்கு முந்தைய வாரம் 6 ஆயிரம் மூட்டை பருத்தியும் ஏலத்திற்கு வந்தது. இதை வியாபாரிகள் உடனடியாக எடுத்துச் செல்ல இயலாததால் மூட்டைகள் தேக்கமடைந்துள்ளன. இதை விரைந்து எடுத்துச் செல்கின்றனர். இதனால் நாளைய ஏலத்திற்குள் எடுத்துச் செல்வதாக வியாபாரிகள் உறுதி கூறியுள்ளனர்.

இவ்வாறு சங்க அலுவலர்கள் தெரிவித்தனர்.

இதனிடையே விவசாயிகளுக்கும், சங்க அலுவலர்களுக்குமிடையே கடும் வாக்கு வாதம் ஏற்பட்டது. இது குறித்து விவசாயிகள் வாழப்பாடி காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவித்தனர். இதையடுத்து எஸ் ஐ ரங்கநாதன் மற்றும் போலீசார் விரைந்து வந்து விவசாயிகளை சமாதானம் செய்ததோடு, சுமார் அரை மணி நேரத்திற்கும் மேல் போக்குவரத்தை சீர் செய்தனர். அப்போது திருச்சியில் இருந்து சேலம் நோக்கி வந்த அரசு பஸ் மற்றும் பருத்தி மூட்டை ஏற்றி வந்த ஆட்டோவும் மோதிக்கொண்டதால் மேலும் பரபரப்பு ஏற்பட்டது. இது குறித்து போலீசார் விசாரணை மேற்கொண்டனர். ஆனால் விவசாயிகளின் வாகனங்கள் இரவு வரை காத்திருக்கும் நிலை ஏற்பட்டது.

**7 டன் தேங்காய் பருப்பு ரூ5.4 லட்சத்திற்கு ஏலம்**

**ஜலகண்டாபுரம்,** : சேலம் மாவட்டம் ஜலகண்டாபுரத்தில் உள்ள வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நேற்று நடந்த ஏலத்தில் 7 டன் தேங்காய் பருப்பு ரூ5.4 லட்சத்திற்கு விற்பனையானது.

சேலம் மாவட்டம் ஜலகண்டாபுரத்தில் திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்க கொங்கணாபுரம் கிளை சேவை மையம் செயல்பட்டு வருகிறது. இங்கு நேற்று தேங்காய் பருப்பு ஏலம் நடந்தது. இதில் ஜலகண்டாபுரம், நங்கவள்ளி மற்றும் சுற்றுவட்டார பகுதிகளான சூரப்பள்ளி, ஆவடத்தூர், சின்னசோரகை, பெரியசோரகை, பனிக்கனூர்,

தோரமங்கலம், கரிக்காப்பட்டி ஆகிய பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் 154 மூட்டைகளில் 7,267 கிலோ தேங்காய் பருப்புகளை விற்பனைக்காக கொண்டு வந்திருந்தனர்.

கடந்த வாரம் குறைந்தபட்சமாக கிலோ ரூ68க்கும், அதிகபட்சமாக ரூ73.55க்கும் ஏலம் விடப்பட்டது. இந்த வாரம் குறைந்தபட்சமாக கிலோ ரூ70க்கும், அதிகபட்சமாக கிலோ ரூ76.85க்கும் ஏலம் விடப்பட்டது. இதன் மூலம் ரூ5,40,000க்கு வர்த்தகம் நடைபெற்றது. சென்ற வாரத்தை விட இந்த வாரம் சராசரியாக கிலோவுக்கு ரூ3.30 அதிகம் கிடைத்ததால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

### 4 ஆயிரம் மூட்டை பருத்தி ரூ90 லட்சத்துக்கு ஏலம்

**இடைப்பாடி,** : கொங்கணாபுரம் திருச்செங் கோடு வேளாண்மை கூட்டுறவு உற்பத்தியா ளர்கள் விற்பனை சங்கத்தில் 4 ஆயிரம் மூட்டை பருத்தி ரூ 90 லட்சத்துக்கு  ஏலம் போனது.

இடைப்பாடி அருகே கொங்கணாபுரத்தில் திருச்செங்கோடு வேளா ண்மை கூட்டுறவு உற்பத்தியா ளர்கள் விற்பனை சங்கத்தில் நேற்று பருத்தி ஏலம் நடைபெற்றது. இதில் சேலம், நாமக்கல், தர்மபுரி, கிருஷ்ணகிரி, ஈரோடு, திருப்பத்தூர், கோவை, பெங்களூரு, திருச்சி உள்ளிட்ட பகுதிகளில் இருந்து 650க்கும் மேற்பட்ட விவசாயிகள், வியாபாரிகள் கலந்து கொண்டனர். இதில் 4 ஆயிரம் மூட்டை பருத்தி விற்பனைக்கு வந்தது. இது ரூ90 லட்சத்துக்கு விற்பனையானது. சிடி ரக பருத்தி குவிண்டால் ரூ 4950 முதல் ரூ 5940 வரையிலும், டிசிஎச் ரகம் ரூ6800 முதல் ரூ7800 வரையிலும் விலை போனது.

### மேட்டூர் அணை நீர்மட்டம் 51.69 அடி

**மேட்டூர்**, : மேட்டூர் அணையின் நீர்மட்டம் 51.69 அடியாக உள்ளது.

மேட்டூர் அணையின் நீர்மட்டம்  நேற்று காலை 51.69 அடியாக  இருந்தது .அணைக்கு விநாடிக்கு 558 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. சேலம், நாமக்கல், ஈரோடு, கரூர் மாவட்டங்களின் குடிநீர் தேவைக்காக,

அணையில் இருந்து 500 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. அணையின் நீர் இருப்பு 18.89 டிஎம்சி.

**இடைப்பாடியில் சூரியகாந்தி அறுவடை மும்முரம்**

**இடைப்பாடி**,: இடைப் பாடி மற்றும் சுற்றுப் பகுதியில் சூரிய காந்தி அறுவடை தொடங்கியுள்ளது.

இடைப்பாடி, கொங்கணாபுரம், குருமப்பட்டி, கோரணம்பட்டி, கோண சமுத்திரம் சமுத்திரம், புதுப்பாளை யம், ஆடையூர், பக்கநாடு உள்ளிட்ட பகுதிகளில் 500 ஏக்கருக்கு மேல் சூரிய காந்தி பயிரிடப்பட்டுள்ளது. சுமார் 90 நாள் பயிரான சூரியகாந்தி தற்போது பூ  திரண்டு அறுவடைக்கு தயாராக உள்ளது. இடை தரகர்கள் மற்றும் சிறிய அளவிலான எண்ணெய் தயாரிப்பாளர்கள் நேரிடையாக விவசாயிகளிடமே கிலோ கி35க்கு கொள்முதல் செய்து செல்கின்றனர். இதன்படி தற்போது இடைப்பாடி மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் சூரிய காந்தி அறுவடை தொடங்கியுள்ளது.

**மானிய விலை தீவன திட்டம் விவசாயிகளிடத்தில் அதிக வரவேற்பு**

**சேலம், :** சேலம் மாவட்டத்தில் கால்நடைகளுக்கு மானிய விலையில் தீவனம் வழங்கும் திட்டத்திற்கு விவசாயிகளிடத்தில் அதிக வரவேற்பு ஏற்பட்டுள்ளது. கோடை காலத்தில் ஏற்படும் வறட்சியை கருத்தில் கொண்டு கால்நடைகளுக்கு தேவையான தீவனங்களை மானிய விலையில் வழங்க அரசு முடிவு செய்துள்ளது. இதன்படி சேலம் மாவட்டத்திற்கு ரூ.50 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டு, நங்கவள்ளி, கொங்கனாபுரம், தலைவாசல், மேச்சேரி, நரசோதிப்பட்டி ஆகிய இடங்களில் உள்ள கால்நடை மருந்தகங்களில் உலர் தீவன கிடங்குகள் அமைக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தில் ரூ.2க்கு தீவனங்கள் வழங்குவதால் விவசாயிகளிடத்தில் அதிக வரவேற்பு ஏற்பட்டுள்ளது. மேற்கண்ட 5 இடங்களில் உள்ள கால்நடை மருந்தகங்களிலும் விவசாயிகள் நீண்ட வரிசையில் நின்று பதிவு செய்து வருகின்றனர்.

இது குறித்து கால்நடை பராமரிப்பு துறை மண்டல துணை இயக்குநர் சிவப்பிரகாசம் கூறுகையில், பதிவு எண்ணிக்கையில் தமிழகத்தின் பிற

மாவட்டங்களை காட்டிலும் சேலம் மாவட்டம் முன்னிலையில் உள்ளது. எதிர்பார்த்ததை விட அதிகளவு விவசாயிகளை இத்திட்டம் சென்றடைந்துள்ளது. தற்போது வரை 10,000 விவசாயிகள் பதிவு செய்துள்ளனர். மேலும் 5000 விவசாயிகள் வரை பதிவு செய்ய வாய்ப்பு உள்ளது. விவசாயிகளிடத்தில் உள்ள வரவேற்பால், மாவட்டத்தில் மேலும் 2 இடங்களில் உலர் தீவன கிடங்குகள் அமைக்க அரசுக்கு கோரிக்கை வைத்துள்ளோம். பிப்ரவரி 10ம் தேதிக்கு மேல் உலர் தீவன கிடங்குகள் செயல்பட துவங்கும்,\ என்றார்.

**உப்பிடமங்கலம் பகுதியில் கிணற்றுப்பாசனத்தில் வெங்காய சாகுபடி**

**கரூர், :** உப்பிடமங்கலம் பகுதியில் கிணற்றுப்பாசனத்தில் வெங்காயம் சாகுபடி பணிகள் நடைபெற்று வருகிறது.

கரூர் மாவட்டத்தில் வெங்காய பயிர் சாகுபடி பரவலாக மேற்கொள்ளப்படுகிறது. பருவமழை பொய்த்து விட்டதால் கிணற்றுப்பாசனத்தை நம்பி வெங்காயம் சாகுபடி செய்யப்பட்டிருக்கிறது. ஆடிப்பட்டத்தில் தாந்தோணி வட்டார பகுதிகளில் வெங்காயம் சாகுபடியை விவசாயிகள் மேற்கொண்டனர். உப்பிடமங்கலம். லிங்கத்தூர். புலியூர், ஜெகதாபி போன்ற பகுதிகளில் சின்ன வெங்காயம் பயிர்கள் கிணற்றுப்பாசன நீரை பயன்படுத்தி விளைந்து வருகிறது. தற்போது களை பறிக்கும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

3மாத பயிரான வெங்காயம் மழை பெய்யாததால் குறைந்த அளவே பயிரிடப்பட்டிருக்கிறது. தாந்தோணி வட்டாரத்தில் மட்டும் சுமார் 25ஏக்கரில் வெங்காயம் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. மழைபெய்தால் சாகுபடி பரப்பு இன்னும் அதிகமாகி இருக்கும். தற்போது ஓரளவுக்கு விளைச்சல் உள்ளது. என்றாலும், விலை குறைந்துவிட்டது. கிலோ ரூ.20க்குதான் நுகர்வோருக்கே விற்கின்றனர். எங்களுக்கு அதைவிட குறைவாகத்தான் கிடைக்கிறது. விலைஅதிகம் கிடைக்கும் என எதிர்பார்த்ததாக அவர்கள் தெரிவித்தனர்.

அமராவதி பாசன பகுதியான பள்ளபாளையம் ராஜவாய்க்கால் பகுதிகளில் தண்ணீரை எதிர்பார்த்திருக்கின்றனர். சின்னதாராபும் முதல் கரூர் கோவிந்தம்பாளையம் ஆங்காங்கே அமராவதி ஆற்றுநீரை பயன்படுத்தி மஞ்சள் சாகுபடி செய்ய விவசாயிகள் தயாராகி வருகின்றனர். மஞ்சள் சாகுபடி

செய்யும்போது வெங்காயத்தை ஊடுபயிராக இப்பகுதிகளில் சாகுபடி செய்வது வழக்கம். 100ஏக்கரில் மஞ்சள் சாகுபடி செய்தால் அதே அளவுக்கு வெங்காயமும் சாகுபடி செய்யப்படும். இதனால் இருபயிர்களும் அதிக மகசூல் கொடுக்கும் என எதிர்பார்ப்பதாக கூறினர்.

**வீரிய ஒட்டு மக்காச்சோள பயிரை சாகுடி செய்யலாம்**

**பொன்னமராவதி**, : நடப்பு கோடை பருவத்தில் குறைந்த அளவு நீரைப்பயன்படுத்தி அதிக விளைச்சலை தரும் வீரிய ஒட்டு மக்காச்சோள பயிரை சாகுபடி செய்ய விவசாயிகள் முன்வர வேண்டும் என பொன்னமராவதி வேளாண் அதிகாரி ஜெயபாலன் கேட்டுக்கொண்டுள்ளார்.

சிறுதானிய பயிர்களில் வீரிய ஒட்டு ரகங்களை தேர்வு செய்து சாகுபடி செய்வது மற்றும் பயறுவகை பயிர்களை நேரடிப்பயிராகவும், ஊடுபயிராகவும் சாகுபடி செய்தல் ஆகியவற்றிற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு வருகிறது. தற்போதுள்ள சூழ்நிலையில் பொன்னமராவதி வட்டாரத்தை பொறுத்தவரை கிணறு மற்றும் ஆழ்குழாய் கிணற்று பாசன பகுதிகளில் கோடை நெல் சாகுபடி மற்றும் நிலக்கடலை பயிர் சாகுபடி பல வருவாய் கிராமங்களில் விவசாயிகளால் மேற்க்கொள்ளப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் உள்ள கால்நடைகளுக்கும், கோழிப்பண்ணைகளுக்கும் தேவையான அடர் தீவணங் களை உற்பத்தி செய்வதற் கான மூலப்பொருளாக மக்காச்சோளம் அதிக அளவில் தேவைப்படுவதால் ஆண்டு முழுவதும் கிலோவுக்கு ரூ.10 க்கு குறையாமல் மக்காச்சோளத்தின் கொள்முதல் விலை இருந்து வருகிறது. வீரிய ஒட்டு மக்காச்சோளத்தை தைப்பட்டம் , ஆடிப்பட்டம் மற்றும் புரட்டாசிப் பட்டத்தில் சாகுபடி செய்து ஒரு ஏக்கரில் சராசரியாக ரூ. இருபதாயிரம் வரை பெறலாம்.

**மயிலாடுதுறையில் அனைத்து நிலையங்களிலும் நெல் கொள்முதல் துவங்கியது**

**நேரடியாக பணம் வழங்க முடிவு**

**மயிலாடுதுறை, :** நெல்லுக்குண்டான தொகையை விவசாயிகளின் விருப்பப்படியே பணம் வழங்க மாவட்ட நிர்வாகம் ஒத்துக்கொண்டதால் மயிலாடுதுறை தாலுகாவில் 30 மையங்களிலும் நேரடி நெல் கொள்முதல் துவங்கியது.
தமிழக அரசின் நேரடி நெல்கொள்முதல் நிலையங்களில் முறைகேடு நடப்பதாக கூறி நெல்லை விற்பனை செய்யும் விவசாயிகளுக்கு நேரடியாக பணம் கொடுக்காமல், வங்கிக்கணக்கில் தொகையை செலுத்திவிட நிர்வாகம் முடிவெடுத்தது. இது சோதனை முறையில் நாகை மாவட்டம் மயிலாடுதுறை தாலுகாவில் உள்ள 30 நேரடி நெல்கொள்முதல் நிலையங்களில் பிப்ரவரி 1ம் தேதிமுதல் அமலாக்கப்பட்டது. இதையடுத்து வழக்கம்போல் விவசாயிகள் நெல் மூட்டை களைக் கொண்டு சென்றபோது வங்கி கணக்கு வேண்டும், பணம் உடனே கிடைக்காது என்று அலுவலர்கள் கூறினர். இதனால் விவசாயிகள் நெல்லை தனியாரிடம் கொண்டு சென்றனர். அதனால் 1ம்தேதியும், தொடர்ந்து 2ம்தேதியும் எந்த கொள்முதல் மையத் திலும் நெல் கொள்முதல் நடைபெற வில்லை.
இந்நிலையில் நேற்றுமுன்தினம் நாகை மாவட்ட கலெக்டர் முனுசாமி உத்தரவின்பேரில், தமிழ்நாடு சிவில்சப்ளை கார்ப்பரேஷன் முதுநிலை மண்டல மேலாளர் ராதாகிருஷ்ணன் கொள்முதல் நிலைய அலுவலர்களுடன் மயிலாடுதுறை சப்கலெக்டர் அலுவலகத்தில் ஆலோசனை கூட்டம் நடத்தினார். சப்கலெக்டர் திவ்வியதர்ஷினி தலைமை வகித்தார். இதில் எடுக்கப்பட்ட முடிவின்படி, விவசாயிகளுக்குப் புரியவைத்து நெல்லை கொள் முதல் செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது. 30 கொள்முதல் நிலைய அலுவலர்களும் இதற்கு சம்மதம் தெரிவித்து நெல்கொள்முதல் நிலையங்களுக்குச் சென்றனர். ஆனால் கொள் முதல் நிலைய சுமை தூக்கும் தொழிலாளர்கள் தங்களுக்கு கூலி அதிகமாக வேண்டும் என்று வேலை நிறுத்தம் செய்து விட்டனர். அதனால் நெல்கொள்முதல் செய்யப்படவில்லை. இரண்டாவது நாளாக மயிலாடுதுறை தாலுகாவில் நெல்கொள்முதல் தடைபட்டது. விவசாயிகளும்

இதற்கு ஆதரவு தெரிவித்து நெல்லை கொள்முதல் நிலையங்களுக்கு அனுப்பாமல் தனி யார் வியாபாரிகளிடம் விற்பனை செய்து வந்தனர்.

இதனால் அரசு கொள் முதல் இலக்கு குறையும் வாய்ப்பு ஏற்பட்டது. ஆனால் திருவாரூர் மாவட் டம் குடவாசல் தாலுக்காவில் நெல்கொள்முதலுக்கு பணம் வழங்கும்முறையே கடைபிடிக்கப்பட்டது. இதுகுறித்து நாகை மாவட்ட நிர்வாகம் முடிவெடுத்து, விவசாயிகள் நெல் கொள்முதல் செய்யும் போது அவர்கள் வங்கிக்கணக்கில் தொகையை வரவு வைக்க கேட்டுக்கொண்டால் அவர்களுக்கு தொகையை வரவு வைக்கவேண்டும் என்றும், உடனடியாக தொகை கேட்பவர்களுக்கு பணத்தை கொடுக்க வேண்டும் என்றும் கூறினர். இதனால் விவசாயிகள் தங்களது போராட்டத்தைக் கைவிட்டுவிட்டு நெல்லை கொள் முதல் நிலையங்களுக்கு அனுப்பி வைத்தனர். அதே போல் சுமை தூக்கும் தொழிலாளர்களும் தங்களது போராட்டத்தை கைவிட்டுவிட்டு பணிக்குத் திரும்பினர்.வெள்ளை விநாயகர் கோயிலில் நாளை கும்பாபிஷேக விழா செம்பனார்கோவில், : நாகை மாவட்டம் செம்பனார்கோவில் குமரன் தெரு வில் வெள்ளை விநாயகர் கோயில் உள்ளது. இந்தக் கோயில் கும்பாபிஷேக விழா நாளை (6ம்தேதி) நடக்கிறது. இதனை முன்னிட்டு நேற்றுமுன்தினம் விக்னேஷ்வர பூஜை மற்றும் கணபதியாகத்துடன் கும்பாபிஷேக விழா தொடங்கியது. நேற்று காலை 8 மணிக்கு நவக்கிரக யாகம், மகாலெட் சுமி யாகம் நடந்தது. மாலை 5 மணிக்கு முதல் கால யாகசாலை பூஜை நடந்தது. இன்று (புதன் கிழமை) காலை, மாலை 2ம் மற்றும் 3ம் கால யாகசாலை பூஜை, கோ பூஜை, பிரும்மசாரி பூஜை, தீபலெட்சுமி பூஜை ஆகிய பூஜைகள் நடக்கிறது. நாளை (6ந் தேதி) காலை 5.30 மணிக்கு 4ம் கால யாக சாலை பூஜை நடக்கிறது. தொடர்ந்து காலை 9.15 மணிக்கு புனித நீர் அடங்கிய கடம் ஊர்வலமும், காலை 9.30 மணிக்கு விமான கலசத்தில் புனித நீர் ஊற்றி கும்பாபிஷேகம் செய்யப்படுகிறது. ஏற்பாடுகளை திருப் பணி குழுவினர் மற்றும் திருப்பூர் குமரன் செங்குந்தர் நலச் சங்கத்தினர் செய்து வருகின்றனர்.

**கோடை சாகுபடிக்கு வசதியாக மானிய விலையில் பருத்தி விதை விநியோகம்**

**சாத்தூர், :** சாத்தூர் வேளாண்மை அலுவலகத்தில் மானிய விலையில் பருத்தி விதை வழங்கப்படுகிறது.

இதுகுறித்து வேளாண் மை உதவி இயக்குநர் ஹரிதாஸ் கூறியதாவது:
சாத்தூர் வட்டாரத்தில் சாத்தூர் மற்றும் நென்மேனி வேளாண்மை விரிவாக்க மையங்களில் கோடை பருவ சாகுபடிக்கு ஏற்ற பருத்தி விதைகள் இருப்பில் வைக்கப்பட்டுள்ளன. மேலும் தீவிர பருத்தி பெருக்கு திட்டத்தின்கீழ் `திருவில்லிபுத்தூர்-4 ரக ஆதாரநிலை பருத்தி விதைகள் விற்பனை செய்யப்படுகின்றன. ஒரு கிலோ விதை ரூ.116.30 வீதம் விநியோகம் செய்யப்படுகிறது. ஒரு கிலோ விதைக்கு ரு.20 வீதம் மானியம் வழங்கப்படுகிறது. அதிகபட்சமாக ஒரு விவசாயிக்கு இரண்டு ஹெக்டேருக்கு தேவையான 30 கிலோ விதைகள் இத்திட்டத்தின்கீழ் மானிய விலையில் வழங்கப்படும். பருத்தி பயிரில் அதிக சேதம் விளைவிக்கும் வாடல் மற்றும் வேர் அழுகல் நோயினை கட்டுப்படுத்த, பருத்தி விதையுடன், ஒரு கிலோ விதைக்கு உயிரியல் பூஞ்சாணகொல்லி மருந்தான சூடோமோ னஸ் 10 கிராம் என்ற அளவில் கலந்து விதைக்க வேண்டும்.

கோடை பருவத்தில் நுண்ணூட்டச்சத்து பற்றாக்குறையால் மகசூல் பாதிப்பை ஏற்படுத்தும் இலை மற்றும் காய் சிறுத்தல் குறைபாட்டை நிவர்த்தி செய்திட வழிமுறை உள்ளது.

இதற் காக பருத்தி நுண்ணூட்ட உரம் ஒரு ஹெக்டேருக்கு 12.5 கிலோ வினை, 50 கிலோ மணலில் கலந்து விதை விதைத்தவுடன் சீராக நிலத்தில் இடவேண் டும். மேலும் நெல், சிறுதானியங்கள், பயிறு, தென்னை, கரும்பு போன்ற பயிர்களுக்கு தேவையான நுண்ணூட்ட உரங்களும் இருப்பில் வைக்கப்பட்டு விநியோகம் செய்யப்படுகின்றன.

நுண்ணூட்ட உரம் தேவைப்படும் விவசாயிகள், உடனடியாக வேளா ண்மை விரிவாக்க மைய த்தை தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம். விவசாயிகள் இந்த வாய்ப்பை சரியாக பயன்படுத்தி பயன்பெற வேண்டும் என்று கூறினார்.

**காலிங்கராயன் வாய்க்காலில் ரூ41 கோடி செலவில் புனரமைப்பு பணிகள் பிப்.8ல் துவங்க திட்டம்**

**ஈரோடு, :** காலிங்கராயன் வாய்க்காலில் ரூ.41 கோடி செலவில் புனரமைப்பு பணிமேற்கொள்ளப்படவுள்ளது. இந்த பணிகளை வரும் 8ம் தேதி துவங்க அதிகாரிகள் திட்டமிட்டுள்ளனர்.

பவானிசாகர் அணையில் இருந்து பவானி ஆற்றில் வரும் நீர் பவானி அருகே காலிங்கராயன் அணைக்கட்டில் தேக்கி வைக்கப்பட்டு அங்கிருந்து காலிங்கராயன் பாசனத்திற்கு திறந்து விடப்படுகிறது. ஆண்டுதோறும் ஜூன் 15ம் தேதி முதல் ஏப்ரல் 31ம் தேதி வரை பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்படுகிறது. காலிங்கராயன் வாய்க்காலில்சாய,தோல் தொழிற்சாலைகளின் கழிவுநீர், சாக்கடை நீர் கலப்பதை முற்றிலும் தடுக்கும் வகையில், கடந்த ஆண்டு ரூ.50 கோடி மதிப்பீட்டில் சுண்ணாம்பு ஓடையில் இருந்து வெண்டிப்பாளையம் வரை வாய்க்காலின் இருகரைகளிலும் தடுப்புச்சுவர், வலது கரையில் ஆய்வுப்பாதை, கழிவுநீர்வெளியேறும் வகையில் பேபிகால்வாய் போன்ற பணி செய்து முடிக்கப்பட்டுள்ளது.

இதனால், இந்தபகுதிகளில் கழிவுநீர், வாய்க்காலில் கலப்பது தடுக்கப்பட்டுள்ளது.இந்நிலையில்,வாய்க்காலின் மேல் பகுதியில் ரூ.41 கோடி செலவில் கான்கிரீட் தடுப்புசுவர் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. காலிங்கராயன் அணைக்கட்டில் இருந்து சுண்ணாம்பு ஓடை வரை பணிமேற்கொள்ளப்படவுள்ளது. அதன்படி,வாய்க்காலின் இருபுறமும் கான்கிரீட் தடுப்புச்சுவர்,ஆய்வுப்பாதை, பேபி கால்வாய் போன்ற பணி துவங்கப்படவுள்ளது. இதற்காக தற்போது வாய்க்காலில் தண்ணீர் நிறுத்தப்பட்டுள்ளது. இந்தபணிகளை மேற்கொள்ள டெண்டர் விடப்பட்டுள்ள நிலையில், வரும் 8ம் தேதி முதல் பணிகளை மேற்கொள்ள பொதுப்பணித்துறை அதிகாரிகள் திட்டமிட்டுள்ளனர். காலிங்கராயன் வாய்க்கால்

பாசனப் பகுதியில் பயிரிடப்பட்டுள்ள மஞ்சள், கரும்பு பயிருக்கு பிப்.15ம் தேதி முதல் மார்ச் 5ம் தேதி வரை தண்ணீர் திறக்க வேண்டும் என்று விவசாயிகள் தரப்பில் ஒருபுறம் கோரிக்கை விடுக்கப்பட்டு வந்த நிலையில், பணிகளை துவக்க வேண்டும் என்பதால் வாய்க்காலில் தண்ணீர் நிறுத்தப்பட்டுள்ளது.

இதுகுறித்து பொதுப்பணித்துறை அதிகாரிகள் கூறுகையில், காலிங்கராயன் வாய்க்காலில் முற்றிலும் சாயக்கழிவு நீர் கலக்காத வகையில் வாய்க்காலின் இருபுறமும் தடுப்புச்சுவர் அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.முதல் கட்டமாக சுண்ணாம்பு ஓடையில் இருந்து கீழ்ப் பகுதியில் ரூ.50 கோடி செலவில் அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டுள்ளது.பேபி கால்வாய் மூலமாக வெளியேறும் கழிவுநீர் சுண்ணாம்பு ஓடை, பிச்சைக்காரன்பள்ளம் ஓடை, பெரும்பள்ளம் ஓடையில் கலக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. இதனால் வாய்க்காலில் கழிவுநீர் முற்றிலும் கலப்பது தடுக்கப்பட்டுள்ளது. 2வது கட்டமாக ரூ.41 கோடி செலவில் பணிகள் தொடங்கப்படவுள்ளது. வாய்க்காலில் ஆய்வுப்பாதை அமைக்கவும், பேபி கால்வாய் அமைக்கவும் இடங்கள் அளவை செய்யும் பணி தொடங்கப்பட்டுள்ளது. விவசாயிகள் தரப்பில் 20 நாட்களுக்கு கூடுதலாக தண்ணீர் திறக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தார்கள்.

ஆனால், பவானிசாகர் அணையிலும் போதிய அளவு தண்ணீர் இருப்பு இல்லாத நிலையில் குறிப்பிட்டப்படி நடப்பு பாசனத்திற்கு ஜூன் மாதம் தண்ணீர் திறக்க வேண்டும் என்பதால் பணிகளை விரைவாக தொடங்க திட்டமிட்டுள்ளோம். அதன்படி வரும் 8ம் தேதி முதல் வாய்க்காலில் கான்கிரீட் பணிகள் நடைபெறவுள்ளது என்றனர்.

**பர்கூர் இன கால்நடைகள் கண்காட்சி சிறந்த பசு, காளைக்கு பரிசு அறிவிப்பு**

**ஈரோடு, :** ஈரோடு மாவட்டத்தில் உள்ள பர்கூர் இன கால்நடைகளுக்கான கண்காட்சி வருகின்ற 8ம் தேதி நடைபெற உள்ளது.

தமிழகத்தில் உள்ள கால்நடைகளின் பாரம்பரியத்தை காக்கும் நோக்கில், நாட்டின கால்நடைகளுக்கு என்று தனியாக கண்காட்சி நடத்த வேண்டும் என கால்நடைத்துறையினர்க்கு தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. அதன்படி, ஈரோடு மாவட்டத்தின் பாரம்பரியத்தின் அடையாளமாக விளங்கி வரும் பர்கூர் இன கால்நடைகளின் கண்காட்சி வருகின்ற 8ம் தேதி பர்கூர் ஊராட்சிக்கு உட்பட்ட துருச்சனாம்பாளையத்தில் நடைபெற உள்ளது.

காலை 7 மணிக்கு தொடங்க உள்ள இந்த கண்காட்சியினை கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் சின்னையா தொடங்கி வைக்கிறார். சிறந்த கால்நடைகளுக்கான பரிசுகளை சுற்றுச்சூழல்துறை அமைச்சர் தோப்புவெங்கடாசலம் வழங்குகிறார். இக்கண்காட்சியில் தேர்ந்தெடுக்கப்படும் சிறந்த பர்கூர் இன பசு மற்றும் காளை, எருதுகளுக்கு முதல் பரிசாக ரூ.3 ஆயிரம் வீதம் இரண்டு கால்நடைகளின் உரிமையாளர்களுக்கும், இரண்டாம் பரிசாக ரூ.2 ஆயிரம் வீதம் நான்கு நபர்களுக்கும், மூன்றாவது பரிசாக ரூ.1000 வீதம் ஆறு நபர்களுக்கும் வழங்கப்பட உள்ளது.

## சிறுவாலை பகுதியில் நெல் அறுவடை துவக்கம்

**மதுரை, :** மதுரை மாவட்டத்தில் இருபோக சாகுபடி நடைபெறும் பெரியார் கால்வாய் பாசன பகுதியில் முதல் போக சாகுபடி மட்டும் முறையாக நடந்தது. பருவ மழை பொய்த்தது காரணமாக இரண்டாவது போக சாகுபடி சரிவர நடைபெறவில்லை. சொந்தமாக கிணறு வைத்துள்ள விவசாயிகள் மட்டும் நெல் நடவு செய்திருந்தனர்.

இந்நிலையில் சிறுவா லை, வயலூர், குமராம், அத லை உள்ளிட்ட பகுதியில் முதல் போக சாகுபடிக்கு பயிரிடப்பட்டது. மழை பொய்த்த நிலையில் கிணற்று பாசனத்தை நம்பி விவசாயிகள் நடவு செய்தனர். தற்போது கதிர் அறுவடை துவங்கியுள்ளது. பெரும்பாலும் கதிர் அறுக்கும் இயந்திரம் மூலம் அறுவடை செய்யும் பணி நடைபெறுகிறது. மணிக்கு ரூ.1200 என நிர்ணயம் செய்து கதிர் அறுக்கப்படுகிறது. ஏக்கருக்கு 20 முதல் 25 மூடைகள் நெல் கிடைத்துள்ளது.

அறுவடையில் கிடைக்கும் வைக்கோலை ஏக்கருக்கு ரூ.5 ஆயிரம் முதல் 6 ஆயிரம் வரை விவசாயிகள் விற்பனை செய்து வருகின்றனர்.

வைக்கோலை வாங்க உள்ளூர் மற்றும் கேரளாவை சேர்ந்த வியாபாரிகள் அதிக அளவில் வந்துள்ளனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**புன்செய் பாசனத்துக்கு கெலவரபள்ளி நீர்த்தேக்கத்தில் இருந்து 100 நாள் தண்ணீர் திறப்பு ஜெயலலிதா உத்தரவு**



**சென்னை,**

கிருஷ்ணகிரியில் இரண்டாம் போக புன்செய் பாசனத்துக்கு கெலவரபள்ளி நீர்த்தேக்கத்தில் இருந்து 100 நாட்கள் தண்ணீர் திறந்துவிடும்படி முதல்–அமைச்சர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

கோரிக்கைகள்

இதுகுறித்து முதல்–அமைச்சர் ஜெயலலிதா வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டு இருப்பதாவது:–

கிருஷ்ணகிரி மாவட்டம் கெலவரபள்ளி நீர்த்தேக்கத்தில் இருந்து வலது மற்றும் இடதுபுற பிரதான கால்வாய் வாயிலாக இரண்டாம் போக புன்செய் பாசனத்துக்காக தண்ணீர் திறந்துவிடுமாறு வேளாண் பெருமக்களிடம் இருந்து எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன.

<u>100 நாட்கள் திறப்பு</u>

வேளாண் பெருமக்களின் வேண்டுகோளை ஏற்று 6.2.14 முதல் (இன்று) கெலவரபள்ளி நீர்த்தேக்கத்தில் இருந்து வலது மற்றும் இடதுபுற பிரதான கால்வாய் வாயிலாக இரண்டாம் போக புன்செய் பாசனத்துக்காக 100 நாட்களுக்கு தண்ணீர் திறந்துவிட நான் ஆணையிட்டுள்ளேன்.

இதனால் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள 8 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதிபெறும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**காலிங்ராயன் வாய்க்காலில் கட்டப்பட்ட பாலத்தை சீரமைக்க வேண்டும் விவசாயிகள் வேண்டுகோள்**

**ஈரோடு,**வெண்டிபாளையத்தில் காலிங்ராயன் வாய்க்காலின் குறுக்கே கட்டப்பட்ட பாலத்தை சீரமைக்க வேண்டும் என்று அந்த பகுதி விவசாயிகள் வேண்டுகோள் விடுத்து உள்ளனர்.

<u>வாய்க்காலின் குறுக்கே பாலம்</u>

ஈரோடு வெண்டிபாளையம் பகுதியில் காலிங்கராயன் வாய்க்கால் செல்கிறது. இந்த வாய்க்காலின் குறுக்கே சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்பு அந்த பகுதி விவசாயிகள் பயன்பெறும் வகையில் ஒரு சிறிய பாலம் அமைக்கப்பட்டது. மேலும்

இந்த வாய்க்காலின் நீரை பயன்படுத்தி அந்த பகுதியில் சுமார் 1000–க்கும் மேற்பட்ட ஏக்கரில் நெல், கரும்பு, வாழை போன்ற பயிர்கள் விளைவிக்கப்படுகின்றன.

அதுமட்டுமின்றி இந்த பாலத்தை பயன்படுத்தித்தான் விவசாயிகள் தங்களுடைய விளைநிலங்களுக்கு தேவையான விதை, உரம் மற்றும் இடுபொருட்களை 2 சக்கர வாகனங்கள், சரக்கு ஆட்டோக்களில் கொண்டு சென்று வந்தனர். மேலும் தங்கள் கால்நடைகளுக்கு தேவையான புற்கள் மற்றும் வைக்கோல்களையும் இந்த பாலத்தின் வழியாக கொண்டும் செல்வது உண்டு. எனவே இந்த பாலம் விவசாயிகளுக்கு மிகவும் பயன் உள்ளதாக இருந்தது.

சீரமைக்க வேண்டுகோள்

இந்த நிலையில் பாலத்தின் ஒரு புறம் இடிந்து விழுந்து விட்டது. இதன்காரணமாக பாலம் குறுகி காணப்படுகிறது. இதனால் இந்த பாலத்தின் வழியாக விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை கொண்டு செல்ல முடியாத நிலை உள்ளது. எனவே விவசாயிகள் சுமார் 2 கிலோ மீட்டர் தூரம் சுற்றி தங்கள் விளைபொருட்களை கொண்டு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. மேலும் இந்த பாலம் குறுகி காணப்படுவதால் 2 சக்கர வாகனத்தில் செல்பவர்கள் ஒருவித அச்சத்துடன் செல்லவேண்டிய சூழ்நிலை உள்ளது. இதனால் 2 சக்கர வாகனத்தில் செல்லும் போது நிலை தடுமாறினால் கால்களை ஊன்றுவதில் சிரமம் உள்ளது.

எனவே இந்த பாலத்தை சீரமைப்பதுடன் அதன் இருபுறங்களிலும் தடுப்பு கம்பிகள் அமைத்து பயன்பாட்டுக்கு கொண்டுவர வேண்டும் என்று என்று அந்த பகுதியை சேர்ந்த விவசாயிகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு வேண்டுகோள் விடுத்து உள்ளனர்.

**கோழிகளுக்கு மூலிகை வைத்தியம்**



பெரும்பாலான விவசாயிகள் கால்நடைகளோடு கோழிகளையும் வளர்த்து வருகின்றனர். கோடைகாலத்தில் கோழிகளை வெள்ளை கழிச்சல், அம்மை நோய் ஆகியவை தாக்குகிறது. இதனால் விவசாயிகளுக்கு மிகுந்த பொருளாதார இழப்பு ஏற்படுகிறது. இந்த நோய்களை தடுப்பதற்கு தடுப்பு மருந்துகள் பயன்படுத்த வேண்டும். நோய் கண்ட நிலையில் மூலிகை முதல் உதவி மருத்துவம் நல்ல பலன் தருகிறது.

<u>வெள்ளைக்கழிச்சல் நோய்</u>

5 வான்கோழிகள் அல்லது 10 கோழிகளுக்கு தேவைப்படும் மூலிகை மற்றும் மருந்து பொருட்கள்

சீரகம்–10 கிராம். மிளகு–5 கிராம், மஞ்சள் தூள்–5 கிராம், கீழாநெல்லி இலை–50 கிராம், வெங்காயம்–5 பல், பூண்டு 5 பல்

சீரகம் மற்றும் மிளகை இடித்து பின்பு மற்ற பொருட்களோடு கலந்து அரைத்து, இந்த கலவையை தீவனம் அல்லது அரிசி குருணையில் கலந்து கொடுக்க வேண்டும். மிகவும் பாதிக்கப்பட்ட கோழிகளுக்கு சிறு, சிறு உருண்டையாக வாய் வழியாக கொடுக்க வேண்டும்.

<u>கோழி அம்மை</u>

பூண்டு–10 பல், துளசி இலை 50 கிராம், வேப்ப இலை 50 கிராம், மஞ்சள் தூள் 10 கிராம், சீரகம் 20 கிராம், கற்பூரம் 5 கிராம் ஆகியவற்றை நன்கு அரைத்து இதனுடன் விளக்கெண்ணை 100 மில்லி மற்றும் வேப்பஎண்ணெய் 100 மில்லி கலந்து சிறிது சூடுபடுத்தி பாதிக்கப்பட்ட இடங்களில் பூச வேண்டும்.

வாய் வழியாக கொடுக்க சீரகம் 10 கிராம், மஞ்சள் 5 கிராம், மிளகு 5, பூண்டு 5 பல், வேப்ப மலை 10 இலைகள், துளசி 10 இலைகள் ஆகியவற்றை எடுத்து கொள்ள வேண்டும். இதில் மிளகை நன்கு இடித்து பின்பு மற்ற பொருட்களோடு கலந்து அரைத்து, தீவனம் அல்லது அரிசி குருணையில் கலந்து கொடுக்கவும். மிகவும் பாதிக்கப்பட்ட கோழிகளுக்கு சிறு, சிறு உருண்டைகளாக வாய் வழியாக கொடுக்க வேண்டும்.

**பாலில் கொழுப்பற்ற திடப்பொருள் குறைவாக இருப்பதற்காக காரணங்கள்**



பாலில் உள்ள சத்துக்களை நீர்ச்சத்து, கொழுப்பு மற்றும் கொழுப்பற்ற திடப்பொருள் என்று பிரிக்கலாம். விவசாயப்பெருமக்கள் உற்பத்தி செய்யும் பாலுக்கு விலை கொழுப்பு மற்றும் கொழுப்பற்ற திடப்பொருள் அளவை பொருத்தே வழங்கப்படுகிறது. தீவன மேலாண்மை மற்றும் பராமரிப்பு முறைகள் மூலம் பாலின் கொழுப்பு மற்றும் கொழுப்பற்ற திடப்பொருள் அளவை அதிகரிக்கலாம்.

வெப்பநிலை அதிகமாக இருப்பது, மாடுகளை வெயிலில் நிற்க வைப்பது, கன்று ஈன்ற பின் தேவையான தீவனத்தை கறவை மாடுகளுக்கு கொடுக்காமல் இருப்பது,

பால் கறக்கும் இடைவெளி 15 மணி நேரத்திற்கு மேல் இருத்தல் ஆகிய காரணங்களால் கலப்பின பசுக்களில் கொழுப்பற்ற திடப்பொருள் குறைவாக இருக்கும்.

பாதுகாப்பு வழிமுறைகள்

பாலை சரியாக 12 மணி நேர இடைவெளிக்கு ஒரு முறை கண்டிப்பாக கறக்க வேண்டும். கறவை மாடுகளின் மடியில் ஒரு வேளை கூட பால் தங்காமல் முழுவதும் கறக்க வேண்டும். கோடையில் கால்நடைகளை தினமும் இரண்டு அல்லது ஒன்று முறை குளிர்ந்த நீரினால் குளிப்பாட்ட வேண்டும். கறவை மாடுகளுக்கு தேவையான அடர்தீவனத்தை கன்று ஈனுவதற்கு முன்னரும், பின்னரும் சரியான அளவில் வழங்க வேண்டும். தீவனத்தை வெயில் வருவதற்கு முன் அல்லது வெயில் நேரம் முடிந்த மாலை நேரத்தில் கொடுக்க வேண்டும்.

கோடைகாலத்தில் கால்நடைகளுக்கு அவற்றின் உடல் எடையில் 10 சதவீதம் வரை பசுந்தீவனத்தை அளிக்க வேண்டும். உலர்ந்த புல் தீவனத்தை சிறு, சிறு துண்டுகளாக நறுக்கி அவற்றின் மேல் நீரைத்தெளித்து ஈரமாக கொடுக்க வேண்டும்.மேலே கூறிய தீவன மேலாண்மை மற்றும் பராமரிப்பு முறைகள் மூலம் அதிகப்பால் உற்பத்தியும், அதிகக் கொழுப்பு மற்றும் கொழுப்பற்ற திடப்பொருள் உள்ள பாலை பெற்று விவசாயிகள் தங்கள் வருமானத்தை பெருக்கி கொள்ளலாம்.

**வறட்சியால் விளைச்சல் இல்லை பொள்ளாச்சியில் வாழைத்தார் வரத்து குறைந்ததால் விலை அதிகரிப்பு**



**பொள்ளாச்சி,**

வறட்சியால் விளைச்சல் காரணமாக பொள்ளாச்சி மார்க்கெட்டிற்கு வாழைத்தார் வரத்து குறைந்ததால் விலை அதிகரித்து காணப் பட்டது.

<u>வாழைத்தார்கள்</u>

பொள்ளாச்சி மார்க்கெட் டுக்கு தூத்துக்குடி, கணியூர், புதுக்கோட்டை போன்ற பகுதிகளில் இருந்து வாழைத் தார்கள் கொண்டு வரப்படு கின்றது. இதை தவிர பொள் ளாச்சி மற்றும் அதன் சுற்று வட்டார பகுதிகளில் இருந்து வாழைத் தார்கள் விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது. செவ் வாழை, மோரீஸ், பூவந்தார், கற்பூர வள்ளி, சாம்பூராணி, நேந்திர பழம், கதளி போன்ற அனைத்து வகையான வாழைத்தார்கள் ஏலம் விடப் படுகின்றன. பொள்ளாச்சி மார்க்கெட் டில் புதன் மற்றும் ஞாயிற்று கிழமைகளில் வாழைத்தார் ஏலம் நடைபெறுவது வழக்கம். அதன்படி நேற்று புதன் கிழமை என்பதால், வாழைத் தார் ஏலம் நடைபெற்றது.

<u>விலை அதிகரிப்பு</u>

ஏலத்தில் பூவந்தார் ரூ.100–150–க்கும், கற்பூரவள்ளி ரூ.100–700–க்கும், செவ்வாழை ரூ.100–700–க்கும், நேந்திரம் கிலோ ரூ.30–க்கும், கதளி கிலோ ரூ.45–க்கும், மோரீஸ் 100–650–க்கும் ஏலம் போனது. வழக்கமாக மார்க்கெட்டிற்கு 3 ஆயிரம் வரை வாழைத்தார் கள் விற்பனைக்கு வரும்.

ஆனால் நேற்று 500 வாழைத் தார்கள் மட்டுமே வந்தன. வரத்து குறைவு காரணமாக விலை அதிகரித்து காணப் பட்டது.இதனால் வியாபாரி கள் மகிழ்ச்சி அடைந்து உள்ள னர்.

<u>வாழை இலை</u>

பொள்ளாச்சி மற்றும் அதன் சுற்று வட்டார பகுதிகளான வேட்டைக்காரன்புதூர், ஆனைமலை, வடக்கிபாளை யம் போன்ற பகுதிகளில் இருந்து பொள்ளாச்சி மார்க்

கெட்டுக்கு வாழை இலை விற்பனைக்கு கொண்டு வரப் படுகின்றன. நேற்று நடை பெற்ற ஏலத்தில் வாழை இலை வரத்து குறைந்து காணப்பட் டது. இதனால் விலை அதி கரித்து இருந்தது. வாழை இலை ஒரு கட்டு ரூ.500 முதல் 1200 வரை விற்பனையானது.

வரத்து குறைவு

இதுகுறித்து வாழைத்தார் வியாபாரி ஒருவர் கூறியதா வது:–

பொள்ளாச்சி மற்றும் தமிழகத்தின் பல்வேறு பகுதி களில் வறட்சி நிலவுவதால் வாழைத்தால் விளைச்சல் குறைந்து உள்ளது. இதனால் மார்க்கெட்டுக்கு வரத்து குறைந்து, விலை அதிகரித்து காணப்படுகிறது. வழக்கமாக 3000 வரை வாழைத்தார் வரும். ஆனால் இந்த வாரம் 500 வாழைத்தார்களே வந்து இருந்தன.

இவ்வாறு அவர் கூறினார்.

**தஞ்சை அருகே கால்நடை பண்ணைகளில் கலெக்டர் ஆய்வு**



**தஞ்சாவூர்,**

தஞ்சை மாவட்டம் நடுவூர் கால்நடை பண்ணை மற்றும் ஈச்சங்கோட்டை உயிரின கால்நடை பெருக்கு பண்ணைகளில் கலெக்டர் சுப்பையன் ஆய்வு செய்தார். 650 ஏக்கரில் நடுவூரில் அமைக்கப்பட்டுள்ள கால்நடை பண்ணையில் ரூ.4 கோடியே 75 லட்சம் மதிப்பில் விவசாயிகளுக்கான பயிற்சிகூடம், நிர்வாக அலுவலகம்,

உணவுகூடம், மாட்டு கொட்டகை, கறவைமாடு, ஆய்வக கட்டிட கட்டுமான பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்த பணிகளை பார்வையிட்ட கலெக்டர் சுப்பையன் பணிகளை விரைவாக முடிக்க அலுவலர்களுக்கு உத்தரவு பிறப்பித்தார். பின்னர் ரூ.7 கோடி மதிப்பில் சாலை அமைக்கும் பணி, சுற்றுச்சுவர் அமைக்கும் பணி, சுத்திகரிப்பு கிடங்கு கட்டும் பணியையும், ஈச்சங்கோட்டை கால்நடை பெருக்கு பண்ணையில் ரூ.73 லட்சம் மதிப்பில் கொட்டகை அமைக்கும் பணியையும், ரூ.25 லட்சம் மதிப்பில் உறைவிந்து சேகரிப்பு கூடம் அமைக்கும் பணியையும் கலெக்டர் பார்வையிட்டார்.

ஆய்வின்போது கால்நடை பராமரிப்புத்துறை இணை இயக்குநர் செல்வவிநாயகம், துணை இயக்குநர் டேவிட், உதவி இயக்குநர்கள் ரவிச்சந்திரன், இளஞ்செழியன், பண்ணை மேலாளர் தாரா, வேளாண்மை பொறியியல்துறை செயற்பொறியாளர் ஆரோக்கியசாமி, பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் அசோகன், உதவி செயற்பொறியாளர் பாஸ்கரன் மற்றும் அலுவலர்கள் உடன் சென்றனர்.

**ஒரத்தநாட்டில் கால்நடை மருத்துவ முகாம் கலெக்டர் தொடங்கி வைத்தார்**

**ஒரத்தநாடு,**

ஒரத்தநாட்டில் கால்நடை மருத்துவ முகாமை கலெக்டர் சுப்பையன் தொடங்கி வைத்தார்.

<u>கால்நடை மருத்துவ முகாம்</u>

ஒரத்தநாடு கால்நடை மருத்துவக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் சார்பில் ஒரத்தநாடு மேலதோட்டம் வளாகத்தில் சிறப்பு கால்நடை மருத்துவ முகாம் நடைபெற்றது. முகாமை தஞ்சை மாவட்ட கலெக்டர் சுப்பையன் தொடங்கி வைத்து பேசினார்.

அப்போது அவர் கூறியதாவது:–

பால் உற்பத்தி

வருங்காலங்களில் மக்களின் எதிர்ப்பார்ப்பிற்கு ஏற்றாற் போல் கால்நடை முகாம்கள் நடத்த வேண்டும்.

மேலும் வேளாண்மைத்துறையை இணைத்து நடத்தினால் இன்னும் சிறப்பாக இருக்கும், தமிழக முதல்– அமைச்சர் கால்நடைத்துறைக்கு என்று பல்வேறு உதவிகளை செய்து வருகிறார். விலையில்லா திட்டங்கள் மூலம் வெளி மாநிலங்களிலிருந்து கால்நடைகளை வழங்கியுள்ளார். எனவே அரசின் பல்வேறு திட்டங்களை சிறிய கிராமம் வரை கொண்டு சென்று விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டிய பொறுப்பு துறையில் உள்ள ஒவ்வொருவருக்கும் உள்ளது.

ஆராய்ச்சி ஆய்வகத்தின் கண்டுபிடிப்புகளை அனைத்து விவசாயிகளிடமும் கொண்டு சேர்க்க வேண்டும். பொது மக்களும் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் நமது மாவட்டத்திற்கு கிடைத்த ஒரு வாய்ப்பாக கருதி ஆராய்ச்சி தொழில் நுட்பங்களை பயன்படுத்திக் கொள்ள வேண்டும். கால்நடைகளின் எண்ணிக்கையை உயர்த்தி பால் உற்பத்தியை பெருக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

பரிசு

விழாவில் ஜெர்மன் நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட முழு தீவனம் தயாரிக்கும் எந்திரத்தின் செயல்பாட்டை மாவட்ட கலெக்டர் சுப்பையன் தொடங்கி வைத்தார்.மேலும் சிறந்த முறையில் வளர்க்கப்பட்ட கால்நடைகள் வளர்ப்போருக்கு கலெக்டர் சுப்பையன் பரிசுகளை வழங்கினார்

விழாவில் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக துணை வேந்தர் அரிகிருஷ்ணன், ஒரத்தநாடு, கால்நடை மருத்துவகல்லூரி முதல்வர் வீரபாண்டியன், மாவட்ட ஊராட்சிக் குழுத்தலைவர் அமுதா ரவிச்சந்திரன், ஒன்றியக்குழுத்தலைவர் சூரியமூர்த்தி, தஞ்சாவூர் கால்நடை மருத்துவ

பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் தலைவர் புண்ணியமூர்த்தி, கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குநர் செல்வவிநாயகம் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**குறைந்த வாடகையில் நெல் அறுவடை எந்திரங்கள் விவசாயிகள் பயன்பெற கலெக்டர் அழைப்பு**

**தஞ்சாவூர்,**

குறைந்த வாடகையில் நெல் அறுவடை எந்திரங்களை பெற்று விவசாயிகள் பயன்பெற கலெக்டர் சுப்பையன் அழைப்புவிடுத்துள்ளார்.

<u>நெல் அறுவடை எந்திரம்</u>

இதுகுறித்து தஞ்சைமாவட்ட கலெக்டர்சுப்பையன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

தஞ்சை மாவட்டத்தில் நடப்பு சம்பா பருவ நெல் அறுவடை நடைபெற்று வருவதால் நெல் அறுவடை எந்திரங்கள் குறைந்த வாடகையில் வேளாண்மை பொறியியல் துறையின் மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. சக்கரம் பொருத்தப்பட்ட அறுவடை எந்திரத்தின் வாடகையானது 1 மணி நேரத்திற்கு ரூ.910 ஆகும். பட்டை பொருத்தப்பட்ட அறுவடை எந்திரத்தின் வாடகையானது 1 மணி நேரத்திற்கு ரூ.1,530 ஆகும்.

அறுவடை எந்திரங்களை வாடகைக்கு பெற தஞ்சை, ஒரத்தநாடு, திருவையாறு, பட்டுக்கோட்டை, பேராவூரணி தாலுகாவை சேர்ந்த விவசாயிகள் தஞ்சை மருத்துவக்கல்லூரி சாலை கிருஷ்ணாநகர் பண்டகவளாகத்தில் செயல்படும் வேளாண்மை பொறியியல்துறை உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தை அணுக வேண்டும்.

<u>புகார் தெரிவிக்கலாம்</u>

கும்பகோணம், பாபநாசம், திருவிடைமருதூர் தாலுகாவை சேர்ந்த விவசாயிகள் கும்பகோணம் செக்காங்கண்ணிரோடு கோமதிநகரில் செயல்படும் வேளாண்மை பொறியியல்துறை உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தை அணுக வேண்டும். வாடகை வசூல் தொடர்பாக புகார் செய்ய வேண்டியது இருந்தால் தஞ்சை புதிய பஸ் நிலையம் அருகே மன்னர் சரபோஜிநகரில் செயல்படும் வேளாண்மை பொறியியல்துறை செயற்பொறியாளர் அலுவலகத்திற்கு நேரில் வந்து தெரிவிக்கலாம். இல்லையென்றால் 04362–235570 என்ற தொலைபேசி மூலமும் புகார் தெரிவிக்கலாம். குறைந்த வாடகையில் நெல் அறுவடை எந்திரங்களை விவசாயிகள் பெற்று நெல் அறுவடை செய்து பயன்பெறுங்கள்.மேற்கண்டவாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## கடலூர் மாவட்டத்தில் 7 இடங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறப்பு

கடலூர்,

கடலூர் மாவட்டத்தில் மேலும் 7 இடங்களில் நேரடி நெல்கொள்முதல் நிலையங்களை இன்று முதல் திறக்க கலெக்டர் கிர்லோஷ்குமார் உத்தரவிட்டுள்ளார்.

கொள்முதல் நிலையங்கள்

கடலூர் மாவட்டத்தில் சம்பா பருவத்தில் 98.421 ஹெக்டேர் பரப்பில் நெல் சாகுபடி செய்யப்பட்டு உள்ளது. பெரும்பாலான பகுதிகளில் நெல் அறுவடை நடைபெற்று வருகிறது. அறுவடை செய்யப்பட்ட நெல்லை கொள்முதல் செய்ய ஏதுவாக கடலூர் மாவட்டத்தில் ஏற்கனவே 143 இடங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம் மூலம் திறக்கப்பட்டு நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

இதன் தொடர்ச்சியாக விவசாயிகள் வேண்டுகோளுக்கிணங்க கூட்டுறவு துறை மூலமாக மேலும் 7 இடங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட உள்ளது. இதற்கான உத்தரவை கலெக்டர் கிர்லோஷ்குமார் வழங்கி உள்ளார்.

மேலும் 7 இடங்கள்

அதன்படி கடலூர் வட்டாரத்தில் கரைமேடு, காட்டுமன்னார்கோவில் (வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம்), சிதம்பரம் (வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம்) மற்றும் பேரூர், பி.முட்லூர், இளங்காம்பூர் ஆகிய இடங்களில் இன்று(வியாழக்கிழமை) முதல் திறக்கப்பட உள்ளது. இதனை பயன்படுத்தி விவசாயிகள் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம் நிர்ணயித்துள்ள விலையில் தாங்கள் உற்பத்தி செய்த நெல்லை விற்பனை செய்திட கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேற்கண்ட தகவலை மாவட்ட கலெக்டர் கிர்லோஷ்குமார் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

**கரூர் மாவட்டத்தில் மேலும் 2 நெல்கொள்முதல் நிலையங்கள் கலெக்டர் தகவல்**



**கரூர்,**

கரூர் மாவட்டத்தில் மேலும் 2 நெல் கொள்முதல் நிலையங்கள் அமைக்கப்படும் என்று கலெக்டர் தெரிவித்தார் .

<u>கூட்டம்</u>

கரூர் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தின் மூலம் நேரடி நெல் கொள்முதல் நிலையம் மாவட்டத்தில் மேலும் அதிகமாக அமைப்பது குறித்தும் மற்றும் விவசாயிகள் அதிக அளவில் நெல் கொள்முதல் நிலையத்தை பயன்பெற வேண்டியும் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்த கூட்டம் கலெக்டர் ஜெயந்தி தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் கலெக்டர் பேசும்போது கூறியதாவது:-

<u>6 கொள் முதல் நிலையங்கள்</u>

தமிழக அரசு உத்தரவின்படி விவசாயிகளின் நலன் கருதி கரூர் மாவட்டத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தின் மூலம் முதல் கட்டமாக குளித்தலை வட்டத்தில் நங்கவரம், நச்சலூார் பகுதியிலும் கிருஷ்ண ராயபுரம் வட்டத்தில் கோவக்குளம், பஞ்சப்பட்டி பகுதியிலும், கரூர் வட்டத்தில் பள்ளபாளையத்திலும், அரவக்குறிச்சி வட்டத்தில் சின்னதாராபுரம் என 6 நேரடி நெல் கொள்முதல் நிலை யங்கள் செயல்பட தொடங்கி உள்ளன.

மேலும் கரூர் வட்டத்தில் விவசாயிகளின் தேவைகளை உணர்ந்து கட்டளை, சுக்காலி யூர் பகுதியில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் அமைக்க அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டு உள்ளது.

மேலும் விவசாயிகளின் தேவைகளை உணர்ந்து அதற்கு ஏற்றால் போல் பணிகளை நுகர்பொருள் வாணிப கழகம் மற்றும் வழங்கல் துறை, கூட்டுறவு துறை, வேளாண்மைத்துறை அலுவலர்கள் இணைந்து செயல்பட்டு விவசாயிகள் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் அதிக லாபம் கிடைக்கப் பெற்ற மகிழ்ச்சியில் செல்ல வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

<u>கொள்முதல் நிலையம் திறப்பு</u>

இதனை தொடர்ந்து குளித் தலை வட்டம் நச்சலூர் பகுதியில் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் அமைக்கப்பட்ட நேரடி நெல் கொள்முதல் நிலை யத்தை கலெக்டர் ஜெயந்தி திறந்து வைத்தார். பின்னர் விவசாயிகளிடம் இருந்து பெறப்பட்ட நெல் மூட்டை களுக்கு உடனடியாக பணம் பட்டுவாடா செய்யப் பட்டது.

நிகழ்ச்சியில் குளித்தலை கோட்டாட்சியர் சிவசவுந்திர வல்லி, நுகர்பொருள் வாணிப கழக மண்டல மேலாளர் செந்தில் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**திண்டுக்கல் காந்தி மார்க்கெட்டில் முருங்கைக்காய் கிலோ ரூ.90–க்கு விற்பனை**



**திண்டுக்கல்,**

திண்டுக்கல் காந்தி மார்க்கெட்டிற்கு, திண்டுக்கல்லை சுற்றியுள்ள கிராமங்களில் இருந்து விளைவிக்கப்படும் முருங்கைக்காய்கள் விற்பனைக்கு கொண்டு வரப்படுகின்றன. கடந்த ஒரு மாத காலத்திற்கும் மேலாக சீசன் இல்லாததால் முருங்கைக்காய் வரத்து குறைந்து உள்ளது. இதனால் கடந்த ஒரு சில நாட்களுக்கு முன்பு சில்லரை விற்பனையில் ஒரு முருங்கைக்காய் ரூ.10 வரை விற்பனை ஆனது.

இந்நிலையில் நேற்று வரத்து குறைவினால் முருங்கைக்காய் ஒரு கிலோ ரூ.90–க்கு விற்பனை செய்யப்பட்டது. அதேபோல் கல்லாமை மாங்காய் ஒரு கிலோ ரூ.120–க்கும், உருட்டு மாங்காய் ஒரு கிலோ ரூ.80–க்கு விற்பனை ஆனது. இனி

தொடர்ந்து முகூர்த்தம் போன்ற விசேஷ நாட்கள் அதிகம் வரும் என்பதால் காய்கறிகள் விலை உயர வாய்ப்பிருக்கிறது என்று வியாபாரி ஒருவர் தெரிவித்தார்.

**பண்ணை முறையில் வான் கோழிகள் வளர்ப்பு**



வளர்ப்பு

வான்கோழி இறைச்சியின் சுவை தனித்துவம் மிக்கதாக இருப்பதால் வான்கோழி இறைச்சிக்கான சந்தையும் குறிப்பிடத்தக்க அளவில் இருந்து வருகிறது. சிறிய அளவு எண்ணிக்கையில் வான்கோழிகளை வளர்ப்பதன் மூலம் ஒருங்கிணைந்த பண்ணை விவசாயத்தை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு குறிப்பிடத்தக்க லாபம் கிடைக்கும். பால் மாடுகள் வளர்ப்பு, புறக்கடை கோழி வளர்ப்பில் ஈடுபடும் விவசாயிகள் வான்கோழிகளையும் வளர்ப்பதன் மூலம் கூடுதல் லாபம் பெற முடியும்.

குறைந்த தீவனம் அதிக எடை

வான்கோழிகள் இயல்பிலேயே குறைந்த தீவனத்தை உட்கொண்டு துரிதமாக எடை கூடுபவை. வான்கோழி பண்ணையை புறக்கடை கோழி போலவோ அல்லது தோப்புகள், மானவாரி நிலங்களில் பண்ணைகளை அமைத்தும் வளர்க்கலாம். இறைச்சிக்காக இவற்றை பண்ணை முறையில் வளர்க்கும் போது கீழ்க்கண்ட முறைகளை பின்பற்ற வேண்டும்.

பண்ணையில் கொட்டகை அமைத்தல்

ஒரு வான்கோழிக்கு 3 முதல் 4 சதுர அடி இடம் என்ற கணக்கில் 500 வான்கோழிகளுக்கு 2 ஆயிரம் முதல் 2 ஆயிரத்து 200 சதுர அடியில் 20 அடி அகலத்தில் கொட்டகைகளை கிழக்கு மேற்காக அமைக்க வேண்டும். உள்புறம் சிமெண்ட் பூச்சு அவசியம். பக்கவாட்டில் ஒன்றரை அடி உயரத்தில் சுவர் எழுப்பி அதற்கு மேல் அடி அளவுக்கு கம்பி வலை பொருத்த வேண்டும். தரையில் நெல் உமி அல்லது தென்னை மஞ்சியை பரப்ப வேண்டும்.

குஞ்சுகள் வாங்கி பராமரித்தல்

வான்கோழி இனத்தில் இறைச்சிக்கான சிறந்த இனங்களாக அகன்ற மார்பு கொண்ட பிரான்ஸ், சிலேட்டு நிற கலப்பினம் அல்லது பெல்ஸ்வில்லி கலப்பினம் ஆகிய இனங்களை நம்பிக்கையான இடத்தில் வாங்க வேண்டும். ஒரு மாத குஞ்சுகளாக வாங்கி வளர்த்தல் நல்லது.

அடைகாப்பானில் வைத்தல்

இளம் குஞ்சுகளுக்கு முதல் 3 வார வயது வரை செயற்கை வெப்பம் அளித்தல் வேண்டும். இதற்கு ஒன்றரை அடி உயர அட்டை அல்லது தகட்டினை 6 அடி விட்டத்திற்கு வைக்க வேண்டும். அடைகாப்பானின் நடுவில் தரையிலிருந்து 2 அடி உயரத்தில் மின்விளக்குகள் பொருத்தி எரிய விடவேண்டும். ஒரு 6 அடி விட்டமுள்ள அடைகாப்பானுக்குள் 150 குஞ்சுகள் வரை விடலாம். குஞ்சுகளுக்கு நாள் ஒன்றிற்கு 5 அல்லது 6 முறை தீவனம் சிறிது சிறிதாக வைக்க வேண்டும்.

வான் கோழி குஞ்சுகளுக்கு தீவனம் வைத்தல்

வான்கோழி குஞ்சுகளுக்கு முதல் 4 வாரங்களுக்கு புரதம் அடங்கிய தீவனம் அளிக்க வேண்டும். இந்த தீவனமானது, மக்காசோளம் மற்றும் கம்பு, சோயாபுண்ணாக்கு, மீன்தூள், தவிடு வகைகள், தாதுஉப்பு, உயிர்சத்துகள்50 கிராம் ஆகியவை கலந்ததாக இருக்க வேண்டும். தீவனத்தை கலந்து அளிக்கும்

போது கோழியின் வயதுக்கு ஏற்ப தீவனத்தில் கலந்துள்ள பொருட்களின் அளவில் மாற்றங்களை செய்து கொள்ளலாம்.

தொடக்க நிலையில், குஞ்சுகள் வாங்கும் இடத்தில் 3 முதல் 4 மாதத்திற்கு தேவையான அளவு வாங்கி வைத்துக் கொள்வது நல்லது. குச்சி தீவனமாக இருப்பின் நல்லது. காரணம் இதில் அனைத்து சத்துகளும் சமசீரான அளவில் கிடைக்கிறது. தீவனம் வீணாவது குறைவு. தீவன மாற்று திறன் அதிகரிக்கிறது.

<u>நோய் பராமரிப்பு</u>

குஞ்சுகளுக்கு முதல் வார வயதில் ராணிகெட் நோய் தடுப்பு மருந்தும், பின்னர் அம்மை தடுப்பு ஊசியும் 1 மாத இடைவெளியில் அளித்தல் அவசியம். தீவனத்தில் ரத்த கழிச்சல் நோய்க்கான தடுப்பு மருந்தையும் 3 வது வார வயதில் அளிக்க வேண்டும்.

<u>வான்கோழி இறைச்சி விற்பனை</u>

வான்கோழிகளை 12 முதல் 16 வார வயதில் விற்பனை செய்து முடித்திட வேண்டும். 9 முதல் 12 வார வயதில் 3 கிலோ எடையும், 11 வார வயதில் 4 முதல் 5 கிலோ எடையும் இருக்க வேண்டும். தீவனம் முறையே 4 கிலோவும், 6 கிலோவும் உட்கொண்டிருத்தல் வேண்டும். இந்த வயதிற்கு பிறகு இறைச்சி முற்றி விடுவதால் உண்பதுற்கு மிருதுவாக இருக்காது. ஆகவே வான்கோழிகளை 12 முதல் 16 வார வயதிற்குள் உள்ள இறைச்சியாக இருக்கும் போது விற்பதும், வாங்குவதும் நல்லது. பிரியாணி உள்பட பிராய்லர் இறைச்சி மூலம் தயாரிக்கப்படும் அனைத்து அயிட்டங்களையும் வான்கோழி இறைச்சியிலும் பண்ண முடியும்.

டாக்டர்.சரவணன், அரசு கால்நடை உதவி மருத்துவர், மதுரை.

**தென்னை மரத்தை சரியான முறையில் நடவு செய்யும் முறை**



தென்னை மரம் ஒரு பல்லாண்டு கால பயிராக பலன் தருவதாக இருக்கிறது. நூறு ஆண்டுகளுக்கும் மேல் வாழும் தென்னை மரத்தை சரியான முறையில் நடவு செய்தால் மட்டுமே அதிகமாக பலன் தரும்.

## தென்னை நடவுக்கான இடைவெளி

தென்னை ஒரு வெப்ப மண்டல பயிர். தென்னைக்கு அதிக சூரிய ஒளி தேவைப்படுகிறது. தென்னைக்கு ஒரு மாதத்தில் குறைந்தது 120 மணி நேரம் சூரிய ஒளி கிடைக்க வேண்டும். சூரிய ஒளியின் அளவு குறைந்தால் ஒளிச் சேர்க்கையின் அளவும் குறையும். இதனால் தென்னையின் தேங்காய் மகசூல் குறைந்து விடும். எனவே, தென்னை மரங்களுக்கு அதிக அளவு சூரிய ஒளி கிடைக்கும் வகையில் அதிக இடைவெளி கொடுக்க வேண்டும்.

பொதுவாக, நெட்டை ரகத் தென்னைகளுக்கு 25 அடிக்கு 25 அடி இடைவெளியும், வீரிய ஒட்டு ரகத் தென்னைகளுக்கு 20 அடிக்கு 20 அடி என்ற இடைவெளியும் கொடுக்க வேண்டும்.

## தென்னை நடும் முறை

தென்னையை சதுர முறை நடவு, முக்கோண முறை நடவு, இரட்டை வரிசை நடவு, ஊடுபயிர்கள் சாகுபடிக்கு ஏற்ற நடவு முறை என்ற பலவகை நடவு முறையில் நடவு

செய்யலாம். தென்னை நடவுக்கு சரியான முறையில் நடவு குழிகளை தயார் செய்ய வேண்டும்.

நன்கு வளர்ச்சி அடைந்த தென்னை மரத்தின் வேர்ப்பகுதி 3 கன அடி சுற்றளவு உள்ளதாக இருக்கும். இந்த வேர்ப்பகுதி மத்தளம் போன்று இருக்கும்.

இந்த மத்தளப் பகுதி முழுவதும் மண்ணுக்குள் புதைந்து இருக்க வேண்டும். அப்போது தான் அதிக வேர்கள் உற்பத்தியாகும். அதற்கு ஏதுவாக 3 அடிநீளம், 3 அடி அகலம், 3 அடி ஆழம் கொண்ட குழிகளை தோண்ட வேண்டும். இந்த அளவுள்ள குழிகள் இருமண்பாடு மண்வகைகளுக்கு ஏற்றதாகும். சரளை மண்ணில் 4 அடிக்கு 4 அடி அளவுள்ளவையாக இருக்க வேண்டும்.

## மண் கண்டம்

தென்னைக்கு குறைந்தது 3 அடி ஆழமுள்ள மண்கண்டம் அவசியம். மண்கண்டத்தின் ஆழம் 3 அடிக்கு குறைவாக உள்ள நிலத்தில் தென்னைகள் ஆரம்ப காலத்தில் வளர்ந்து விடும். ஆனால், காய்ப்பு நின்று விடும். எனவே, மூன்று அடிக்கு குறைவாக ஆழமுள்ள மண்ணில் தென்னை பயிரிடுவதை தவிர்த்து விட வேண்டும். இவ்வாறு தகுந்த அளவுகளில் குழிகளைத் தோண்டிய பிறகு அவைகளின் உட்புறங்கள் நன்கு உலர்ந்து காய்ந்த பிறகு, குழிகளில் காய்ந்த சருகுகளைப் போட்டு தீயிட்டு எரிக்க வேண்டும். இவ்வாறு செய்வதால், குழியின் உள்புறத்தில் காணப்படும் கரையான்கள் மற்றும் பூஞ்சாணங்கள் அழிந்து விடும். சருகுகளை எரிப்பதால் கிடைக்கும் சாம்பல் தென்னங்கன்றுகளுக்கு உரமாகி விடும்.

## மருந்து மற்றும் உரம்

இவ்வாறு தயார் செய்யப்பட்டுள்ள நடவுக் குழிகளில் முதலில் குழி ஒன்றுக்கு 10 கிராம் வீதம் குளோர்பைரிபாஸ் தூள் மருந்தை தூவி விட வேண்டும். பின்னர் 2 பங்கு செம்மண், 3 பங்கு ஆற்றுமணல் மற்றும் 1 பங்கு மக்கிய தொழுஉரம்

ஆகியவைகளை கலந்து தயாரித்த மண்கலவையை குழிகளில் இடவேண்டும். இந்த மண்கலவையை நடவு குழிக்குள் ஒரு அடி உயரத்திற்கு போட வேண்டும்.

தென்னங்கன்றுகளை 2 அடி ஆழத்தில் நடவு செய்ய வேண்டும். குழிகளில் நடப்பட்டுள்ள தென்னங்கன்றுகள் காற்றில் அசையாமல் இருப்பதற்கு தென்னங்கன்றின் அருகில் 2 அடி உயரமுள்ள குச்சி ஒன்றை நட்டு வைத்து, அதனுடன் சேர்த்து தென்னங்கன்றை கயிற்றால் கட்டி விட வேண்டும். வாடி வதங்காமல் இருக்க ஓலைகளை சுற்றி விட வேண்டும். இவ்வாறு சரியான நடவும், முறையான பராமரிப்பும் இருந்தால் தென்னை விரைவாக காய்த்து நல்ல பலன் தரும்.

கி.ராஜேந்திரன், துணை இயக்குநர், நீர்மேலாண்மை நிலையம், விநாயகபுரம்.

தி இந்து
தமிழால் இணைவோம்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## வீட்டில் மின்சாரம் தயாரித்து மின்வாரியத்துக்கு விற்பனை- விழுப்புரம் அருகே அதிசயிக்க வைக்கும் விவசாயி



விழுப்புரம் அருகே ஒரு விவசாயி தன் வீட்டில் சூரிய ஒளிமூலம் மின்சாரம் தயாரித்து மின்வாரியத்துக்கு விற்பனை செய்கிறார் என்ற தகவலால் ஆச்சரியமடைந்து அவரை அவர் வீட்டில் 'தி இந்து' சார்பில் சந்தித்தோம்.

விழுப்புரம் மாவட்டம், ராம்பாக்கம் கிராமத்தில் கரண்ட் விக்கிறவர் என்ற அடைமொழிப் பெயருடன் அழைக்கப்படும் சுப்புராயலுவை அவரது வீட்டு மொட்டைமாடியில் சென்று பார்த்தோம். சூரிய ஒளி தகடுகளைச் சுத்தப்படுத்திக்கொண்டிருந்தார்.

அவர் நம்மிடம் பேசியது: மின்தட்டுப்பாட்டால் அவதிப்பட்ட நேரத்தில்தான் சூரிய ஒளி மூலம் மின்சாரம் உற்பத்தி செய்வது தொடர்பாக அறிந்தேன். வீட்டுக்கான மின்சாரத்தைத் தயாரிக்க சோலார் நிறுவனங்களை அணுகினேன். அப்போதுதான் “எங்கும் மின் விளையும்...எம்மனையும் மின் நிலையம்” என்ற திட்டத்தின்மூலம் கடந்த 2013-ம் ஆண்டு மார்ச் மாதம்

1200 வாட் திறன் கொண்ட கதிர் மின்னாக்கிகளை என் வீட்டு மொட்டைமாடியில் நிறுவினேன். இதன் மதிப்பு ரூ.2 லட்சத்து 52 ஆயிரம் ஆகும். இதற்கு அரசு 60 ஆயிரம் ரூபாய் மானியம் வழங்கியது.

தனியார் நிறுவனம் இத்தொகையைக் கடனாக வழங்கியது. முன்பணமாக 55 ஆயிரம் செலுத்தி மீதமுள்ள 1 லட்சத்து 47 ஆயிரம் ரூபாயை 10 மாதத் தவணையாக வட்டியில்லாமல் 14 ஆயிரத்து 750 ரூபாயாகச் செலுத்த ஒப்புக்கொண்டு இதனை அமைத்தேன்.

இது செயல்படதுவங்கியதும் என் வீட்டுக்கு 24 மணி நேரமும் மின்சாரம் கிடைத்தது. இதன் மூலம் தினமும் 8 மணி நேரத்தில் 9 கிலோவாட் மின்சாரம் கிடைத்தது. பகலில் உற்பத்தியாகும் மின்சாரத்தை பேட்டரி மூலம் சேமித்து இரவில் பயன்படுத்தினேன். உபரி மின்சாரத்தை யூனிட் 2 ரூபாய்க்கு மின்வாரியத்துக்கு விற்கிறேன்.

எவ்விதப் பராமரிப்பு செலவும் இல்லை. இதனால் மின்கம்பிகள் மூலம் மின்சாரம் செல்லும்போது ஏற்படும் மின் இழப்பு இல்லை. மிகவும் லாபகரமாக உள்ளது என்றார் அவர். இத்தனைக்கும் சுப்புராயலு படிக்காதவர். வெளியே வந்த முன்னிரவு நேரத்தில் வீதியே இருளில் மூழ்கி இருக்கச் சுப்புராயலு வீடு பளிச்சென்று பிரகாசமாக இருந்தது. சூரிய மின்சாரத்தைத் தயாரிப்பதன் மூலம் மின்பற்றாக்குறையைப் போக்கலாம். அனைவரும் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த அழைப்புவிடுக்கிறது வீட்டு வாசலில் கட்டி வைக்கப்பட்ட விளம்பர பேனர்.